உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி உ௰.] துந்துபி-ஹு ஆடி-மீ [பகுதி ௯.
Vol. XX. *July–August–1922.* *No. 9.*

உள்ளுறை.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா–8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உ௰.] துந்துபி-ஷு ஆடி-மீ [பகுதி கூ.

Vol. XX. July-August-1922. No. 9.

தமிழ்க்கல்விவளர்ச்சி.

இந்நிலவுலகிலே, "இருவகைப்பொருள்கள்கல்வி யேற்றசெல்வங்களாமே" எனக்கூறிய இருவகைப்பொருளுமே இம்மை மறுமை வீடெய்துவதற்குக் காரணமாகும்.

"இருவே றுலகத் தியற்கை திருவேறு – தெள்ளிய ராதலும் வேறு" எனத் திருக்குறளிற்கூறியவாறு உலகத்திலே ஊழினலாய இயற்கை இரண்டுகூறுயிருக்கின்றன. ஆதலாற் செல்வமுடையாதற்குக் காரணமாகுமூழ் அறிவுடையாதற்குக் காரணமாகாது; அறிவுடையாதற்குக் காரணமாகுமூழ் செல்வமுடையாதற்குக் காரணமாகாது; என்பதனை யாவரும் நன்குணரவேண்டும்.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றி—னடுவண தெய்த விருதலையு மெய்தும்" என நாலடியாரிற்கூறியவாறு பொருளொன்றுனே தருமமும் இன்பமுமாகிய இரண்டு மெய்தலாமெனினும், அப்பொருளை அறிவொன்றுனே நல்வழிப்படுத்தி, அறமும் இன்பமும் எய்தவேண்டுமென்பதுவிளங்க, "அறிவுடைய ரெல்லா முடைய ரறிவிலா — ரென்னுடைய ரேனு மிலர்" எனத் திருக்குறளிற் கூறியிருக்கின்றுர்.

இன்னும், கல்வியறிவில்லாதவர்க்குப் புண்ணியபாவமும், இம்மை மறுமையும், வீடும் தெரியமாட்டாவென்பது விளங்க,

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக்
கருதரிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்

பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே"

எனத் திருக்குற்றாலத்தலபுராணத்திற் கூறியிருக்கின்றார்.

இன்னும், கல்வியறிவில்லாதவர் விலங்கோடொப்பாவரென்பது விளங்க, "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்—கற்றாரோ டேனை யவர்" எனத் திருக்குறளிற்கூறியிருக்கின்றார்.

இங்ஙனமே பலவாறாகப் பலநூல்களினுங்கூறியிருக்கின்றமையாற் கல்வியறிவே சிறந்ததாகும்.

இக்கல்வியறிவாகிய செல்வத்தை யாவரானும் இலேசாகத் தேடிப் பெற்றுக்கொள்ளமுடியாது. நல்லாசிரியரையடைந்து வழிபட்டுப் பற்பல நாளாகப் பற்பலநூல்களைத் "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்—கற்றனைத் தூறு மறிவு" எனத் திருக்குறளிற் கூறியவாறு சிறிது சிறிதாகக் கற்றுப் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

இவ்வாறுகற்றுக் கல்வியறிவாகியசெல்வத்தை எல்லாரும் பெற்றுக் கொள்ளமுடியுமோவெனில்,

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை"

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி"

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்"

எனத் திருக்குறளினும், "கேள்விமுயல்" எனக் கொன்றைவேந்தனிலும் கூறியிருத்தலாற் கற்றுத்தெளிந்தோர்கூறக்கேட்டாயினுந் தெரிந்து புண்ணியபாவமறிந்து நன்னெறியொழுகி நற்கதியடைய வேண்டும்.

இங்ஙனமிருப்பதனால், நூல்களைக் கற்கப்புகுவாரும், கல்லாமலிருப்பவரும் நல்லறிவெய்தி நன்னெறியொழுகி யுய்யுமாறுகருதிக் கற்றவர்க்கு நற்றுணையாய்ச் சற்குணசீலபோதராயிருந்த பாண்டித்துரைத்தேவரவர்கள், மதுரையிலே தமிழ்ச்சங்கந் தாபித்துக் கலாசாலைவைத்து, வருடந்தோறும் பலதேசவித்துவான்களை வரவழைத்து நன்னெறிகளையும் நீதிகளையும் பிரசங்கஞ்செய்யும்படி செய்துவந்தார்கள். தாங்களும் பலவூரிலும் பிரசங்கஞ்செய்துவந்தார்கள். இவர்கள் நடத்திவந்ததுகண்டுதான் பலவூர்களினுங் கலாசாலைகளும் பிரசங்கங்களும் நடத்திவருகிறார்கள்.

இவ்வித்தியாதருமமன்றோ பேரறிவும் பெருஞ்செல்வமு முள்ளவர்கள்செய்யுஞ் சிறந்ததருமமாகும். இப்பொழுது நம் தமிழரசர்சிகாமணியாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள் மேற்கூறியவற்றை நடத்திவருகிறார்கள்.

இதனைக் கண்டறிந்த நகரத்தாராகிய வணிகர்கள், சிலவூர்களின் மாத்திரங் கலாசாலைவைத்துக் கற்போர் கற்கும்படிசெய்து, கேட்டறிவோர் கேட்டறியுமாறு வருடந்தோறும் பலவித்வான்களைவரவழைத்துப் பிரசங்கமும் நடத்திவருகிறார்கள். இன்னமும் அநேகர்கள் கவனிக்கவில்லை. அவ்வாறு நகரத்தார்கள் தங்களுடைய பலவூரிலும் நடத்துவார்களாயின் அவர்கள் பெற்றிருக்கிற பெருஞ்செல்வத்திற்கு மேலாகிய பெரும் புண்ணியமாகும்.

இவ்விருவகையினரும் நடத்திவருகிற இவ்வித்தியாதானப் பெருந்தருமம் வளர்ந்துபரவுவது தெரிந்திருந்தும், சைவமடாதிபதிகளும், சைவத்திருவாளராகிய ஜமீந்தார்களும், பெரியபிரபுக்களெனப்பெயர்பெற்றபெருஞ்செல்வர்களும் தங்களூரிலாவது இவ்வித்தியாதருமத்தை நன்குநடத்திவருங்கடமையுற்றிருந்தும் அந்தோ! ஏனோ பராமுகமாயிருக்கின்றார்கள்.

பண்டைக்காலந்தொடங்கி அன்னதானத்துக்கும் வித்தியாதானத்துக்கும் ஏற்படுத்தப்பட்டு நடத்திவந்த சைவமடாதிபதிகள் பெரும்பொருளைப் பலவிதமான வீண்செலவுசெய்து தொலைக்கின்றார்கள். வருடந்தோறுஞ் செலவாகிறபொருளிலே நாலிலொருபங்கு அன்னதானத்துடன் வித்தியாதானத்துக்குச் செலவுசெய்தாற் போதுமே. இவ்விருவகைத்தானமுஞ் செவ்வைபாக நடைபெறச்செய்யாமல் மிகவும் சிறி

தாகச்செய்து பெரிதாகச்செய்துவருவதுபோற் பாவனைகாட்டுகிறார்கள் இச்சைவமடாதிபதிகள் மந்திரம், கிரியை, பாவனை இம்மூன்றானும் தினமும் பூசைசெய்வார்கள். அப்பூசைக்குரிய பாவனையை இவ்விரு வகைத்தானத்துக்கும் உபயோகப்படுத்துவது தக்கதாகுமா? இங்ஙனஞ்செய்கின்ற இவர்கட்கு எங்குநிறைந்த பரம்பொருளே யறிவுறுத்த வேண்டுமன்றி யறியுறுத்துவா ரொருவருமில்லை.

இச்சைவமடாதிபதிகள் இவ்வாறாகப் பராமுகஞ்செய்து, இத்தருமத்தைமேற்கொண்டுநடத்தாமலிருப்பார்களானால், ஏனையஜமீன்தார்களையும், பிரபுக்களாயிருக்கிற பெருஞ்செல்வர்களையுங்குறித்து நாம் பேசும் வகையில்லை.

பெருஞ்செல்வர்களாயிருக்கின்ற அநேகர்கள் லௌகிககாரியங்களிலே யுழைத்து, "உண்டதேயுண்டுமுடுத்ததேயுடுத்துமுரைத்ததேயுரைத்துரைத்துங் — கண்டதேகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தனகடவுளெல்லாம்" எனச் சோணசைலமாலையிற் கூறியவாறு காலங்கழித்தால், மக்களடையு முறுதிப்பொருளெனக்கூறும் அறம் பொரு ளின்பம் வீடாகிய நாற்பெரும்பயனையும் எவ்வாறு கற்றறிந் தெவ்வாறு பெற்றுய்வர். தாங்கள் கற்றறிந்து அவைகளைப் பெறுமுறையாற்பெற் றுய்ய முடியாவிடினும், உலகிலே பற்பலரைக் கற்றறிந்து பெற்றுய்யும்வண்ணஞ்செய்வது தாங்கள் செல்வம் பெற்றதனாற்பெற்ற பெரும்பயனாகு மன்றோ? எக்காலத்தி லெது குறைவாயிருக்கின்றதோ அதனை யக்காலத்திலே நிறைவாகச்செய்வ துலகிற்குப் பேருபகாரமாகும். இக்காலத்திலே நந் தெய்வத்தமிழ்வளர்ச்சி குறைந்திருப்பதறிந்திருந்தும் அறியாதார்போலிருக்கின்றார்கள். அந்தோ! ஈ தொருபரிதாபந்தான். "அற்காவியல்பிற்றுச் செல்வ மதுபெற்றால்—அற்குப வாங்கே செயல்" என்னுந் திருக்குறளை யுற்றுநோக்கவேண்டும்.

உலகிலே செல்வப்பொருளை வியாபாரஞ்செய்தும், வட்டியத்திற்குக் கொடுத்தும் வளர்த்தால், அங்ஙனம்வளராமற் கேட்டினையும் பொருந்துமன்றோ! கல்விப்பொருளை ஒருவருக்குக் கொடுத்தால் அவர் பலருக்குக் கொடுப்பர்; அப்பலர்களிலே ஒவ்வொருவரும் பற்பலருக்குக் கொடுப்பர். இவ்வாறு வளர்ப்பதன்றோ பேரூதியமாகும். இக் கருத்தடங்கும்படியான வொருகவி திருவாவடுதுறையாதீன சற்குருசாமிகளின்முன் கூறியிருக்கின்றேன். அக்கவி வருமாறு:—

“ ஒருவருக்குக் கல்வியெனும் பொருளுதவி லவர்பலர்கட் குதவல் செய்வார்
மருவியவப் பலர்களிலொவ் வொருவரும்பற் பலர்களுக்கு வழங்கு வாரிப்
பெருகுமுறை யறிந்திதனைப் பற்பலர்க்கிங் குதவும்வண்ணம் பிரியங்கொண்டாய்
குருமணியம் பலவாண யாவரிவ்வூ தியமுனைப்போற் கொள்வார் தாமே”.

இதனை அக்குருசாமி திருவுளங்கொண்டு வித்தியாதானமும் மடத்திலே நடக்கிறதென்பது துலங்கச்செய்துவந்தது பலருந் தெரிந்திருக்கிறார்கள். இன்னும் பலபடப்பேசுவதிலாவ தென்னை. ஆதலாற் கன தனவான்கள்,

“ஒன்றே செய்யவும் வேண்டு மொன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டு மின்றும்
இன்னே செய்யவும் வேண்டும் ”

எனக் கூறியவாறு விரைந்துசெய்வதே அறிவிற்குஞ் செல்வத்திற்கும் பெரும்பயனாகும்.

நல்லறிவுடைய பெருஞ்செல்வர்கள் இங்ஙனங்கூறியவற்றையெல்லாம் உய்த்துணர்ந்து, இவ்வித்தியாதருமத்தைத் தங்களாலியன்றவாறு நடத்துவது பெரும்புண்ணியமாகும். சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகருமான

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

யாப்பருங்கலக்காரிகை யுரைத்திருத்தம்.

சுன்னுகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள், இரண்டாவது பதிப்பிற் பதிப்பிக்குமாறு தமது யாப்பருங்கலக்காரிகையுரையிற் சில திருத்தங்கள் செய்துவைத்திருந்தார்கள். அவற்றைப் படிப்போர்க் குபயோகமாகும்பொருட்டு யாம் இச்செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிப்படுத்துகின்ரும்.

உறுப்பியல் உ-ம் செய்யுளுரையில், "குறிலே நெடிலே நெறியேவரினும் நிரைந்து ஒற்றடுப்பினும்" என்பதை, "குறிலே நெடிலே நெறியே வரினும் ஒற்றடுப்பினும்" எனத் திருத்துக.

"குறிலிணையேனைக் குறினெடிலே நெறியேவரினும் நிரைந்து ஒற்றடுப்பினும்" என்பதை, "குறிலிணையேனைக் குறினெடிலே நிரைந்துவரினும் ஒற்றடுப்பினும்" எனத் திருத்துக.

கூ-ம் செய்யுளுரையில், "வழுவாவெழுத்தொன்றின் எதுகை" என்பதோடு இரண்டாம் என்பதைக்கூட்டி, "இரண்டாம் வழுவாவெழுத்தொன்றின் எதுகை" எனத் திருத்துக.

அடிதோறும் என்பதை, மோனைமுதலிய எல்லாவற்ருேடுங் கூட்டுக.

கஉ-ம் செய்யுளில், "இடையிட்டதொரூஉ" எனப் பாடங்கோடலுமமையும்.

செய்யுளியல்.

கூ-ம் செய்யுளுரையில் "அங்கண் விசும்பின்" என்னும் செய்யுளை,

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்ருே ரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்ருேரஃ தாற்ருர் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்."

எனத் திருத்துக.

ஒழிபியல்.

க-ம் செய்யுளுரையில், நில்லைவாழ் "இல்லையே" "குன்றையார்" என்பன நெடிலாகக்கொண்டு, மூவசைச் சீராகக்கொள்ளப்படும் என்பதை, "குன்றையார் என்பது நெடிலாகக்கொண்டு மூவசைச்சீராகக்கொள்ளப்படும்" எனத் திருத்துக.

௬-ம் செய்யுளுரையில்,

"சுர வணங்கிலே மாவொடு சூழ்கரைச்
சர வணம்மிது தானனி போலுமால்
அர வணங்குவி லாண்டகை சான்றவன்
பிரி வுணர்ந்துழி வாரல னென்செய்கோ."

என்னும் செய்யுளை,

"சுரவ ணங்கிலே மாவொடு சூழ்கரைச்
சரவ ணம்மிது தானனி போலுமால்
அரவ ணங்குவி லாண்டகை சான்றவன்
பிரிவு ணர்ந்துழி வாரல னென்செய்கோ."

எனத் திருத்துக.

இவையும் இன்னுஞ்சிலவும் குமாரசுவாமிப் புலவரவர்களால் திருத்தி எழுதப்பட்டிருந்தன. அவற்றை நாம் இங்கே எழுதினும். அறிஞர் நோக்கியுணர்க. பிழைகள் யாவும் மற்றையபதிப்பிற் திருத்தியச்சிடப்படும். தண்டியலங்காரவுரைமுதலியவற்றிலும் புலவரவர்களாற் றிருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை பின் காட்டப்படும்.

சி. கணேசையர்.

களப்ரர்கள்.

சென்ற பங்குனிமாதத்துச் செந்தமிழில் ஸ்ரீமான் கே. ஜி. சங்கர ஐயர் அவர்களால் வேள்விக்குடிச் செப்பேடுகள் பதிப்பிக்கப்பட்டதைக் கண்டு அளவற்ற ஆனந்தங்கொண்டேன். ஐயரவர்கள் இதுவரையிற் செய்த ஆராய்ச்சிகளோடு நிற்காமல் இப்போது தமிழ்நாட்டுச்சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு என்றும் உபயோகப்படக்கூடிய உதவியைச்செய்துள்ளார்கள். அவர்கள் எழுதிய முன்னுரை மிகவும் சிறியதாகஇருந்தாலும் அரியபொருள்களை உடையதாயிருக்கிறது, 207-ம் பக்கத்தில் அவர் இச்செப்பேடுகளிற் கூறப்பட்ட களப்ராது ஆதிக்கத்தை ஆதாரமாகக் கொண்டு சங்ககாலத்தை நிர்ணயிக்கின்றார், இதையே அவர்கள் மிதிக்

ஸொஸைட்டிப்பத்திரிகையில் (Quarterly Journal of the Mythic Society Bangalore Vol. XI. pp. 81–83) விரிவாகக் கூறியிருக்கிறார்கள். அங்குச் சாஸனத்தின் அப்பகுதிக்குப் பொருள்கூறும்போது அருத்தத்தை இடத்திற்குப்பொருந்தும்படி மாற்றிக் கூறுவதாகத் தோன்றுகிறது.

மூலத்தில் 'கஉஅனென்னுங்கலிஅரைசன்' என விருப்பதால் அது ஒருவனையே குறிக்கின்றதெனக்கொள்ளுகிறார். அங்ஙனமாயின், 'அளவரிய அதிராஜரை அகலநீக்கி' எனக் கூறியிருப்பது எப்படி ஒருவனாலாகும்? 'அதிராஜரை' எனப் பன்மையிலிருப்பதால் அது குறைந்தது இருவரையாவது குறிக்கவேண்டுமெனக் கூறுகிறார்; அப்படியாயின், 'அளவரிய' என்பது எங்கேசெல்லும்? ஆகவே, அவர் அத்தொடருக்கு 'அளவரியபாண்டியர்களை அவர்களது கடைசிச்சந்ததியின்மூலமாக' எனப் பொருள் கூறுகிறார். இப்பிரயோகம் நாம் அறியாதது அல்ல. ஆனால், இது கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப்பிறகு, ஒரு சமஸ்தானப்புலவர் தனது அரசரைப்புகழும் ஸமயத்தில்மட்டும் தான் உபயோகப்படுத்தப்பட்டுவந்தது. அன்றி, இங்கோ, பாண்டியனது ஸேவகனொருவன் பாண்டியனைப் புகழும்ஸமயத்தில் அதற்குமாறாகக் களப்பிரருக்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, சங்கரையாவர்கள் கூறும்பொருளை நாம் ஒத்துக்கொள்ளமுடியாது. 'அளவரிய அதிராஜரை' என்பது 'எண்ணிக்கையற்ற பாண்டியரை' எனவே பொருள்படுத்தப்படவேண்டியது. இதை உறுதிப்படுத்த ஆதாரங்கள் இன்னும்உள. நாம் மேலேபோவதற்குமுன் களப்ரர் என்பவர் யாவரெனப் பார்ப்போம்.

வேள்விக்குடிச் செப்பேடுகளைப்பற்றிக் கொடுத்த அறிக்கையில் ஸ்ரீமான் வெங்கையா அவர்கள் 'மூர்த்திநாயனார்புராணத்திற் குறிப்பிக்கப்பட்டிருக்கும் கருநாடரும் களப்ரரும் ஒருவரெனக்கூறினர். (G. O. No. 574–17th July 1908. pp. 62–63) காலஞ்சென்ற கோபிநாதராயாவர்கள் உள்பட யாவரும் இதை ஒத்துக்கொண்டனர். ஸ்ரீமான் ஐயாவர்கள் மட்டும் இதை மறுக்கின்றார்கள். அவர், 'மதுரையைப்பிடித்த களப்ர அரசனை வெருட்டப்பட்டான் என நாம் மேலே காண்பித்தோம். ஆனால், கருநாட அரசன் வெருட்டப்படாமலே ஸந்ததியில்லாமல் இயற்கையாக இறந்திருக்கின்றான். அன்றி, கருநாடக அரசருக்குப்பின் பட்டமெய்தப்

பாண்டிய அரசர் ஒருவருமில்லாததால், மூர்த்திநாயனர் பட்டமெய்த, களப்ரனுக்குப் பிறகு கடுங்கோன் பட்டமெய்தினன். முடிவாக, களப்ரரும் கருநாடரும் ஒரு இடத்திலும் ஒருவராக நினைக்கப்படவில்லை. அதற்குமாருக, சரித்திரத்திலும் இலக்கியத்திலும் இருவரும் வேருகவே குறிப்பிடப்படுகிருர்கள்' எனக் கூறுகிருர் (O. J. H. S. Vol. X. pp. 178).

முதலாவதாக, கடுங்கோனே, களப்ர அரசனை முறிய அடித்துப் பட்டமெய்தினனு இல்லையாவென்பதை நாமறியோம். மூலமோ,

"அளவரிய அதிராஜரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்ரனென்னுங் கலிஅரசன் கைக்கொண்டதனை இறக்கியபின்
படுகடன்முளைத்த பருதிபோல் வாணாயிராஜன் வெளிற்பட்டு" 39-42

எனக் கூறுகிறது. அந்த உவமானத்திலிருந்து களப்ரர் அங்கிருந்த பொழுது பாண்டியவமிசமே உலகத்திற்குப் புலப்படாமலிருந்தது என்பது பெறப்படுகிறது இதிலிருந்து, பெரியபுராணத்திற் கருநாடக அரசன் இறந்ததும் பட்டமெய்தப் பாண்டியவமிசத்தில் ஒருவருமில்லை யெனக் கூறப்பட்டிருப்பதற்கு ஒருவாறு ஸமாதானங் கூறலாம்.

இரண்டாவதாக, "சரித்திரத்திலும் இலக்கியத்திலும் இருவரும் வேருகவே குறிப்பிடப்படுகிருர்கள்." எனக் கூறுவதற்கு ஆதாரமே கிடையாது. ஒருக்கால், வேள்விக்குடிச்செப்பேடுகள் ஓரிடத்துக் கருநாடரை,

"தென்னவானவன் செம்பியன்சோழன்
மன்னர்மன்னன் மாகருநாடகன்
கொன்னவின்ற கொடுஞ்சுடர்வேற்
கொங்கர்கோமான் கோச்சடையன்" (69-71)

எனக் கூறுவதைக்கண்டு மயங்கியிருக்கலாம். இஃது அங்ஙனமாகாது. உதாரணமாகப் பல்லவர்க்குக் காடவர் என்ற பெயர் உண்டென்பதை நாம் அறிவோம். அதே வேள்விக்குடிச்செப்பேடுகள் பல்லவர்களை ஓரிடத்து,

"செ(ழும்புரவிப்) பல்லவனை[க்]குழும்பூட்டேசழிய" (78-79)

எனவும், மற்ருேரிடத்து,

"நாற்பெரும் படையும் பார்படப்பரப்பிக்
கருதாது வந்தெதிர்மலைந்த காடவனைக் காடடைய" (91–92)

எனவும் கூறுகிறது. அன்றி, களப்பிரர்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கூடப் பிரபலமாக இருந்ததாகத்தெரிகிறது. சிறிதுகாலத்திற்கு முன் நான்கண்டுபிடித்த நந்திவர்மன் பல்லவமல்லனது கொற்றங்குடிச் செப்பேடுகளில், *

யஸ்ய வக்ஷஸ்ஸ்தலஸ்தா ஜோஷா
வாணஸ்ய ஸேநா ஸஹ கோங்கணாதிபஃ ।
காரி வேஸ ஸமயாதி காங்க்ஷிணஃ
ஸேவிதும் நிரவகாஸ ஸாஸதே ॥

எனக் கூறப்பட்டிருக்கிறது. அன்றி, சளுக்கிய விக்கிரமாதித்தன் இரண்டாமவன் தென்னாடுபோந்தபோது இவர்கள் முறிய அடிக்கபட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. (Ep. Ind. Vol. V. p. 204). இங்ஙனம், கோச்சடையனது வெற்றியை மற்றொருவமிசத்திற்கு உரிமையாக்காமற் களப்ரர்கள்மேல் என எண்ணுவது தவறாகாது.

பெரியபுராணத்தில், கருநாடரைப்பற்றிக் குறிக்கும்பொழுது,

"கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர்காவல்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள்வானா
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர்திண்டேர்ச்
சேனைக் கடலுங் கொடுதென்றிசை நோக்கிவந்தான்."

"வந்துற்ற பெரும்படை மண்புதை யப்பரப்பிச்
சந்தப் பொதியிற் றமிழ்நாடுடை மன்னன்வீரஞ்
சிந்தச் செருவென் றுதன் னாணை செலுத்துமாற்றாற்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல்கொண்டான்."

"தாழுஞ் சமண்கையர் தவத்தைமெய் யென்றுசார்ந்து
வீழுங் கொடியோ னதுவன்றியும் வெய்யமுன்னைச்
சூழும் வினையா லரவஞ்சுடர்த் திங்களோடும்
வாழுஞ் சடையா னடியாரையும் வன்மைசெய்வான்."

(மூர்த்தி—புராணம்)

* இச்செப்பேடுகள் அடுத்தபத்திரிகையில் வெளியிடப்படும்.

எனவும், வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத்தில்,

“துன்னு சேனையிற் றுளங்கிய வொருகரு நாட
மன்ன னன்னநாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கை விழுந்து
முன்ன நீடிய வைதிக முறையையு மொழித்தான்”

(மூர்த்திக்கு அரசளித்த திருவிளையாடல்)

எனவும் கூறப்பட்டிருக்கிறது. கி. பி. பத்தாம்நூற்றுண்டிற்கு முன்பு மதுரையும் பாண்டிநாடும் ஒரேஒருதரந்தான் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. வேறென்றை நாம் அறியோம். களப்ரர்கள் வேள்விக்குடியாகிய தருமசொத்தைநீக்கியசெய்தியைப்போலக் கருநாடர்கள் வைதிகமுறையையும் சடையானடியாரையும் வன்மைசெய்தசெய்தி மேலேகாட்டிய செய்யுள்களிலிருந்து நன்கு பெறப்படும். இவைகளிலிருந்து களப்ரர்களும் கருநாடர்களும் ஒன்று என நினைப்பதே மேல்.

களப்ரர்ஆக்கிரமிப்பு ஒருதலைமுறையாக இருந்தால் இழக்கப்பட்ட ஸொத்தைச் சுலபமாகப் பாண்டியன் பட்டமெய்தியஉடனேயே அடைந்திருக்கலாம். இவ்விடத்திலோ அப்படிக் காணப்படவில்லை. ஸொத்தின் பாத்தியதைக்காரர் அதைத் திரும்பிஅடையப் பாண்டியன் மறுபடியும் பட்டமெய்தியபிறகு சுமார் 150 வருஷங்களுக்குமேற் காத்திருக்க வேண்டியிருந்தது. இதுவே பிறர்களது ஆக்கிரமிப்பு நீண்டகாலம் இருந்ததைக் காண்பிக்கிறது. பிறவரசர்களது ஆட்சி ஒருதலைமுறையாக இருந்தால், தருமசொத்துக்கள் திரும்பியடையமுடியாதவண்ணம் பிடுங்கிக்கொள்ளப்பட்டன எனக்கூறுவது பொருந்தாது. நான் முதலிலேயே ஒரு அரசன் பலவரசர்களைப் பட்டத்தினின்றும்நீக்குதல் இயலாதெனக் கூறியிருக்கிறேன். அன்றி, இச்செப்பேடுகளே மற்றோரிடத்து, “வேள்விக்குடி என்னப்பட்டது கேள்வியிற்றரப்பட்டதனைத் துளக்கமில்லாக் கடற்றானையாய் கஊ ஹ்ராலிறக்கப்பட்டது.” (110–12) எனப் பன்மையிற் கூறுகிறது. இங்ஙனம் மதுரையைக் களப்ரர்கள் ஆண்டது ஒருதலைமுறையல்ல.

சிலர் முதலில் மூலத்தில் ஏன் ஒருமையிற் கூறப்பட்டிருக்கிறது என ஆக்ஷேபிக்கலாம். செப்பேடுகள் களப்ரர்கள் தோற்கடிக்கப்பட்டுச் சுமார் 150 வருஷங்களுக்குப்பிறகே எழுதப்பட்டனவென்பதும், செப்பேடுகளுக்குப் பிரசஸ்தி எழுதியபுலவன் அவ்வளவு முந்திய காலத்துச்

சரித்திரத்தை நன்கு அறிந்தவனன்றென்பதும் நாமறிந்தவையே. கி. பி. 1850க்கு முற்பட்டகாலத்தை இப்பொழுதும் நம்பெரியோர்கள் 'கலகக்காரன்காலம்' எனக்கூறுவதுபோல அக்காலத்திற் பாண்டியநாட்டு ஆக்கிரமிப்பைக் 'களப்ரன்காலம்' என வழங்கியிருத்தல் இயற்கையே.

கடுங்கோனே, களப்ரவரசனை முறிய அடித்துப் பட்டமெய்தினுனெனப்படும் கொள்கையை நான் ஸந்தேகிக்கின்றேன் என முன்னமேயே கூறினேன். களப்ரர்கள் முறிய அடிக்கப்பட்டது சுமார் கி. பி. 760–(30×6)=580 ஆகும். அக்காலத்தில், தமிழ்நாட்டில் முக்கியமான அரசர்கள் தொண்டைநாட்டையாண்ட பல்லவர்களே. அச்சமயத்து ஆண்டபல்லவன் முதலாம் மஹேந்திரவர்மனது தகப்பன் ஸிம்ஹவிஷ்ணுவாகும். இவ்வரசன்தான் தனது நாட்டைச் சீர்ப்படுத்தித் தெற்கேயுள்ளநாடுகளை ஜயிக்கமுயன்றவன். இவனைப்பற்றி வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் "கவீரனது புதல்வி (காவிரியாறு) விளங்குகின்றதும், நெற்காட்டை (வயல்களை) ஆபரணங்களாக உடையதும், தென்னந்தோப்புகள் அதிகம் காணப்படுகிறதுமான சோழநாட்டை அவன் சீக்கிரம் பிடித்துக்கொண்டான்" எனவும் (South Indian Inscriptions. Vol. II. p. 512. Verse 31), காசாக்குடிச்செப்பேடுகள், அவன் "மலய, களப்ர, மழவ, சோழ, பாண்டிய அரசர்களையும், தனது புஜபராக்கிரமத்தால் மமதைகொண்ட சிங்கள அரசனையும் கேரளர்களையும்" தோற்கடித்தான் எனவும் (S. I. I. Vol. II. p. 356 Verse 20) கூறுகின்றன. இவைகளிலிருந்து, களப்ரர்களது அழிவு ஸிம்ஹவிஷ்ணுவால்தான் என நான் நம்புகிறேன்.

முடிவாக, சங்கம் முடிந்தபிறகு சுமார் கி. பி. 500ல் களப்ரர்கள் தமிழ்நாட்டுப்போந்து பாண்டியர்களைத் தோற்கடித்து மதுரையைப்பிடித்துக்கொண்டார்கள். ஆரும் நூற்றாண்டின்முடிவில் பல்லவ ஸிம்ஹவிஷ்ணு தெற்கே படையெடுத்துவந்து களப்ரர்களை முறிய அடித்தான். ஆனால் அவன் நாட்டைச் சரிப்படுத்துவதற்குள், பாண்டியன் கடுங்கோன் நாட்டைப்பிடித்துக்கொண்டு சூரியன்போற் பிரகாசிக்கத்தொடங்கினுன். இதுவே, நாம் தற்காலத்திற் களப்ரரைப்பற்றி அறிவது.

தி. நா. சுப்பிரமணியன்,
கும்பகோணம்.

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(௱௨0-ஆம் பக்கத்தொடர்ச்சி)

புனல்விளையாட்டுப்படலம்.

தோகையர்வாவியந்துறைக்கணெய்தலு
மாகமாநுமதவயவங்கள்யாவையு
மோகையாய்க்காத்தனமோர்ந்துகொண்மினென்
றேகுவார்போன்றனபிரிந்தபுள்ளெலாம். (1)

சீதநீர்த்தடத்திடைத்திகழுமாமணிச்
சூதெனுமுலையினார்நிழல்கடோன்றுவ
பூதலமங்கையர்பொற்பினற்புதம்
பாதலமங்கையர்பார்ப்பதொக்குமால். (2)

வள்ளையுங்குமுதமும்வனசநீலமும்
பிள்ளைமானேக்கியர்மெய்யிற்பின்னுவ
கள்ளமாயெமதெழில்கவர்ந்தயாக்கையை
விள்ளுவமெனத்தனிவிசித்தல்போலுமால். (3)

துன்னருந்தடத்திடைநீந்துந்தோகைதன்
பொன்னருமுலைக்குடம்பேனம்போர்த்தன
முன்னவன்பயோததிகடைந்தமுன்னைநா
ளின்னமுதொடுமெழுங்கலசமேய்க்குமால். (4)

மலர்க்குழலியரொடுமொருவன்வாகுவி
னலப்புறுபுனலெலாங்கலக்கியாடுத
லுலப்பிலாவரம்பையநுவரியூடெழக்
கலக்கியமந்தரவரையிற்காட்டுமால். (5)

கடகளிறெனுந்திறற்காளைவீரனத்
தடமுறுபுனலிலோர்தையல்காணவே

குடதிசைமுழ்கினன்குணக்கெழுந்தனன்
சுடரவன்கடல்குளித்துநிக்குந்தோற்றம்போல். (6)

வேளமைவடிவினானொருவன்விழிவாய்த்
தோளமைகொண்டவடுவிணைப்பயோதர
வாளமைகண்ணிதாமரையிரண்டொரு
தாளமைவனகொலோவென்னத்தாங்கினான். (7)

குற்றபாகெனுமொழியொருத்திகொங்கையைப்
பற்றினான்புனலெலாம்பாந்துநீந்தினா
னற்றமில்காமமாங்கடற்கொரம்பியைப்
பெற்றவனீந்துதல்பேசவேண்டுமோ. (8)

முரண்டருமனத்தினானொருவன்மொய்ம்பொடு
திரண்டழகொழுகுபொற்புயத்தைத்தெப்பமா
யிரண்டயில்வேற்கண்ணாரிவந்துநீந்தினார்
திரண்டெழுதிரைமிசைமுன்னஞ்சென்றன? (9)

புயற்கருங்கூந்தலார்புக்கங்காடலிற்
கயத்துயர்தாமரைபசையுங்காட்சிதான்
மயக்குறுகண்ணியர்வடிவனோக்கியே
வியப்புறுவாவிகைவிதிர்த்தல்போலுமே. (10)

தேய்ந்தநூன்மருங்கினார்முழ்கித்தேமலர்க்
கூந்தனீர்மகிழ்நர்தோள்குளிரவீசுவார்
சாந்தநீள்குவடியர்சயிலமேற்கட
னேய்ந்தமேகக்குழாஞ்சொரிவதென்னவே. (11)

அலர்ந்ததாமரைமுகமரும்புகொங்கைதேன்
கலந்தசேதாம்பல்வாய்காவிகண்கணீர்
வலந்தசைவலங்குழல்வள்ளைகாதுமாய்ப்
பொலன்குழைமகளிரொடொத்தபூந்தடம். (12)

மைந்தருமகளிரும்வாவியாடுதல்
சிந்துரக்களிறனான்றுஞ்சிந்தியாச்

சந்தவாரணிமுலைத்தையலாளொடு
மந்தவாவியிற்குடைந்தாடினனரோ. (13)

பொற்கொடிதன்னொடும்பொருவில்வேந்தர்கோன்
நற்புனல்படிந்தெழுகின்றநன்னல
மற்புதவுவமையொன்றுமிழிவாய்வருங்
கற்பகம்வல்லியோடெழுந்தகாட்சிபோல். (14)

இனையனபுனல்குடைந்தினிதினுடிய
வனைகழன்மன்னனுமாதுமற்றுள
வனைவருந்துகிலணியணிந்துசந்திரன்
றினகரனுதயமுற்றெனச்சிறந்தனர். (15)

இந்துகாந்தத்தினுலிலங்குமண்டப
மந்தவாவியின்புறத்தாக்கியவ்வயிற்
புந்திகாதலனுமப்புனிதமங்கையுஞ்
சிந்தைகூர்களிப்பொடுசேர்ந்துவைகினர். (16)

புரிகுழன்மங்கையும்புரூரவாவுமீங்
கரியனமகிழ்ச்சியினுங்குவைகலும்
பெருவளம்பெருகியபிரதிட்டானமாந்
திருநகருற்றதைச்செப்புவாமரோ. (17)

புனல்விளையாட்டுப்படலமுற்றும்.

வித்துமாலிநகர்கொண்டபடலம்.

முத்துமாலிகையின்முந்துபுனற்கார்
தொத்துமாலியின்விளங்கியதோளான்
பித்துமாலியுருமென்றபெருஞ்சொல்
வித்துமாலியெனும்வெங்கணரக்கன். (1)

சுடரெறித்தகதிர்சூழ்வடகுன்றம்
வடபுலத்தடையவல்லிருளெல்லாந்
தடையறக்கடிதுசாருதல்போல
விடபமுற்றநகர்மேவினன்மாதோ. (2)

மாகநீள்புரிசைமாநகரெங்கும்
வேகவாள்வலியரக்கர்மிடைந்தே
யோகைகூர்தரவுலாவினரூழி
யேகவேலைபுவியெய்துவதென்ன. (3)

முன்னைநாளுளமுழுப்பகையாலே
யன்னமாநகர்வளங்களனைத்துங்
கொன்னயிற்பொருநர்கொள்கெனவேவித்
தன்னதானைசெலவேதவிசுற்றான். (4)

திறையெடுத்தரசர்சென்றுவணங்கும்
பொறையெடுத்துவளர்புந்திமகன்ற
னிறையெடுத்தமையெமக்கெனவெங்கும்
பறையடித்திடுகவென்றுபணித்தான். (5)

கைதவம்புரிகடுஞ்சொலரக்கன்
வெய்யவெம்பறைவிளம்பிடுமோதை
வையகஞ்செவிமடுப்பவயர்ந்த
நெய்தலின்பறையிதென்னநினைந்தே. (6)

மரபினானெறிவழாதபெருஞ்சீ
றாவுநீர்நகருறைந்தவர்யாருங்
காவுநீணிசிசரன்புவிகாக்க
வரவின்வாயின்வருதேரையினார். (7)

தாலமேழுமொருதண்கவிகைக்குன்
மாலினுந்தியெனவைத்துவளர்ப்போன்
சீலநனகரிதியவர்கொண்டார்
காலமென்றவரையாவர்கடப்பார். (8)

காமியாவரினாயகம்போ
லாமியாரெனுமகந்தையராகிப்
பூமியாதிபொருட்பயனெல்லாஞ்
சேமியார்கெடுதலின்மையதன்றோ. (9)

இந்திராதியரிரும்பதியெல்லா
முந்தைநாளவுணர்கோடலின்முந்நீர்
நந்துநீரினுலகங்கணடுங்கு
மந்தநாளெனநடுங்கினதவ்வூர். (10)

இற்றதாயநகரின்றிறமெல்லாம்
பொற்றபூணிளைதரும்புதல்வன்பா
லொற்றரோடினருணர்த்தவுணர்ந்தான்
மற்றிலாதநெறிமன்னவர்மன்னன். (11)

விந்துமாலிநகர்கோண்டபடல முற்றும்.

வனம்புகுபடலம்.

ஆயவாய்மொழியரசன்றன்செவிகளுக்கனல்வாய்க்
காயும்வேலுறத்தைத்தெனநெஞ்சகங்கனன்றான்
சீயம்வாழ்மலைமந்தரத்திடையினிற்சிறுசெந்
நாயும்வாழவந்தனகொலோவென்றிவைநவின்றான். (1)

மனத்தின்முந்துறும்வாசிவாரணத்தொகைவயவ
ரினக்கொடும்படையாவையுமெழுகவென்றிசைத்தே
சினக்கும்வாள்வலியரக்கனைச்சிறந்துமித்திடுவ
னினைப்பின்முன்னெனக்கொடிநெடுந்தேர்மிசைநிவந்தான். (2)

கட்டமைந்தசெஞ்சிலையொடுபுட்டிலுங்கணையுந்
தொட்டகோதையுங்கழலுமெய்க்கவசமுந்தொட்டான்
றட்டிலாநெறிச்சாரதிதனைமுகநோக்கி
விட்டிடாயினித்தேரென............பவள்விரித்தாள். (3)

சதங்கைகொஞ்சுதாட்டையலாடலைவனைத்தாழ்ந்து
கதங்கொளாஇறைகேட்டிவெங்கதழெரிமருங்கே
பதங்கமெய்துதிற்பழுதுறல்யாதெனப்பார்த்திங்
கிதங்கள்செய்வதேமுறைமைமற்றுண்டுரையினும். (4)

ஆழிக்குன்றினுக்கப்புறஞ்செல்லுமுன்னணை
யாழிப்பாருலகனைத்துமுன்றேட்கரைப்பார
மூழிக்காலெழும்வடவனற்சிகையினையுணரு
மேழைக்காகநீசேறலன்றின்னமொன்றுளகேள். (5)

அரக்கனெண்ணமென்றெண்ணுவதெண்ணமன்றருத்த
மிரக்கமின்றியன்றுரைத்திடுஞ்சாபத்தினியல்பும்
குரைக்கருங்கழன்மன்னவபங்குவுங்குறித்த
வரைக்கடுத்தநாள்வந்தனவாமெனவகுத்தாள். (6)

இரவிவானவன்விளங்குறுமிருநிலவரைப்பிற்
பருவம்வேறுவேறாயினகாலத்தின்பகுதி
தெரியநாடின்மற்றன்னதேயெனச்சிந்தைசெய்யா
தொருவர்மேற்குறைசொல்லுவதறிவினுக்குரித்தோ. (7)

நிறைந்தபாரெலாமசுரரேகொண்டிடநிமல
னறைந்தநாள்வரைமவுனியாய்க்கிரிப்புறத்தமர்ந்தா
னுறைந்ததானமுங்காலமும்வாலிதிரெருங்கே
யறிந்தடங்குதல்வாகைபின்வாகைபாயமரும். (8)

கருமமன்னதேயாதலாலிந்நகர்கடந்து
புரிசைசூழ்தருமற்றோருநகரியிற்புகுந்து
தருமமேதுணைபாமெனச்சரித்திடத்தகுமென்
றரிமதர்க்கணாளறைந்திடப்புரூரவாவறைவான். (9)

பரந்தவான்படைக்கேசிபாமசுரர்கோன்பற்ற
வரந்தையுற்றிடுமுருப்பசிதன்னைமீட்டமரர்
பெருந்தகைப்புரந்தரற்களித்தவன்மணிப்பீடந்
திருந்தபானினிவெளியர்போலாரிடத்திருத்தல். (10)

இன்றுசென்றுவல்லரக்கனைக்கோறுதலின்றேற்
பொன்றுகின்றவிவ்விரண்டிலொன்றெனவெழும்போதின்
வென்றமந்திரத்தலைவர்வந்தடிமிசைவீழ்ந்து
நின்றுகேட்டிடவேண்டுமென்றொருமொழிநேர்வார். (11)

வாலராயினும்விருத்தரேயாயினுமழலைப்
பாலராயினும்பயிற்பிலராயினும்பயிலுங்

கோல்வளைக்கொடியன்னவாாயினுங்குறித்து
மேல்வரும்பயன்விளம்புவோர்மந்திரமிக்கோர். (12)

ஆகையாலெழிலம்புயத்திருமகளனைய
தோகைவாய்மொழிதெய்வதமொழியெனத்துணிந்தோர்
பாகமேவியேநிருதர்கோன்வலியெலாம்பார்த்திங்
கேகவேண்டுமென்றுரைத்தனர்மன்னனுமிசைந்தான். (13)

குரவரந்தணர்மந்திரத்தலைமையர்குலத்தோர்
பரவுமன்னவர்சேனைகாவலரொடும்பழையோர்
விரவுமன்பினர்யாவருமருகுறவிரைவி
னுரைசெய்மாதொடுமைந்தர்களொடுமவனெருவி. (14)

வேறு.

ஏமாங்கதன்கனகாங்கதனெனுமைந்தரிலிகல்வேற்
கோமானெருமகவேந்திடக்கொம்போர்மகவேந்தத்
தூமாங்கியினெரிகானிடைதொடர்ந்தேகினர்துணர்ப்பூந்
தாமாங்கதவிறன்மன்னவர்முடிமேலுறுசரணம். (15)

தன்னிற்புரிதவநல்கியதனைமைந்தர்களுடனே
பொன்னிற்பொலிமனையாளொடுவெங்கானிடைபுகுத
மின்னிற்றிகழ்...
நின்னிற்பிரிகலம்யாமெனநெறிமுந்துவர்சிலரால். (16)

நெறியோடொருகுடைநீழலிவிபமேல்வருநிருபன்
வறியோரெனமரநீழலின்வனமேகுதல்காணு
வெறியோடியகுழன்மாதரும்வேல்வேந்தரும்விம்மிப்
பொறியோடியகயிறற்றிடுமரப்பாவைகள்போன்றூர். (17)

உதகார்கலியுலகியாவையுமுணர்வோய்ந்துயிருலையச்
சுதையார்மதிகதிராயவர்தெரியாவனந்தொடர்ந்தான்
குதையார்சிலைநுதலாளொடுகுணபூதரமனையான்
மதமாகரிபிடியோடொருவனமேவுவதெனவே. (18)

புல்வாயொடுபுலியும்மொருதுறைநீரிடைபுகுதுங்
கொல்வாளரியுடனேசிறுகளிறுந்தனிகுலவும்

பல்வாய்விடமுமிழ்நாகமுமயிலாடுதல்பார்க்கு
மல்வாழியபுயதாதுகுமன்னன்செலும்வனமே. (19)

முன்னாளினில்வினையோவெனமொழிவார்சிலர்முழுது
நன்னாடுறையெவரும்புரிநவையென்பவர்சிலராற்
றன்னார்தொழுதெழுதாமரைத்துணைத்தாளிணைதமியே
மென்னாளினிற்காண்கின்றதென்றேங........ன்றவர்சிலரால். (20)

புயலுந்தினவனமேலுறைபுயலுந்தினகனலின்
சிகையுந்தினமாலுந்தளிர்சினையுந்தினநனையின்
முகையுந்தினநலியுங்கொடிமுருகுந்தினமலரும்
பகையுந்தினசுடர்வேலிறைபுகழுந்தினபகமே. (21)

வேறு.

வேங்கைபோதுழிவேழமெதிர்வுழி
யாங்குசியமதிர்வுழியஞ்சியே
மாங்கதன்னழுமற்றையக்கான்முளை
யீங்குபற்றித்தருகெனவேகுமால். (22)

வெய்யகானின்மிதிக்கப்பொறுதபூஞ்
செய்யதாளிணைநோவுறத்தேம்புமத்
தையலுக்குத்தாபதிவிம்முறு
மையகூந்தலாண்மைந்தரைப்பார்த்தழும். (23)

வேறு.

ஒசியுநுண்ணிடையொக்கலைதாங்கிய
வசியின்மைந்தனைமன்னவன்றோட்கொரு
மிசையுந்தோண்மிசையென்னையுமேற்றெனப்
பிசையுங்கண்ணொடுநிற்குமோர்பிள்ளையே. (24)

ஆலவான்பெருக்காறுசெல்லாறுறிற்
பாலர்தம்மையோர்தோளிற்பரித்தற
னீலவார்குழலுங்கொண்டுநீந்துவான்
றாலமேழையுந்தாங்குந்தருக்கினன். (25)

வரையுமாறுமடுவுஞ்சுனைகளும்
பொருவில்கானுங்கழியும்புளினமுங்
கருவிவானெதிராச்சுரமுங்கடி
தொருவியாங்கணொருநதிகண்ணுற்றான். (26)

கண்டசாமைநதியின்கரையடுத்
தண்டயோனிதன்னுதவத்தாலயர்
வுண்டமைந்தர்க்குணவுசற்றாட்டெனத்
தொண்டைவாய்ச்சியத்தோன்றற்குச்சொல்லினள். (27)

நாமவாரிதிநானிலமீதினிற்
காமர்கங்கைதரும்பலன்காட்டுமச்
சாமைமாநதிமூழ்கித்தளிரியல்
வாமமைந்தர்க்கடிசில்வழங்குவாய். (28)

என்றுதானுமிரும்புனலாடிடப்
பின்றுகூந்தலுந்தோய்ந்துபெரும்பதங்
கன்றுமைந்தர்பசிக்கெனக்கட்டிய
துன்றுமூலவிழ்ப்பத்தொடங்கலும். (29)

எற்குமுந்துறவீகெனுமொன்றுசோ
றெக்கவெற்கென்றெடுக்குமற்றோர்திறஞ்
செக்கர்வாய்ச்சிசிரித்தவிழாமுன
னெக்கவெம்புழுவாகநெளிந்ததே. (30)

சோறனைத்தும்புழுவெனத்தோன்றலும்
வேறளிப்பதொன்றின்மையின்மெய்த்தவப்
பேறளித்தபெருமகாரைத்தழீஇ
யாறளித்தனள்கட்கடலாலரோ. (31)

பசிபொறுதுபதைத்துத்துடித்துளங்
கசியுமைந்தரைக்கைகொடுதாங்கியே
விசயமன்னனும்விம்மிப்பொருமினன்
பொசியுங்கண்ணீர்புறத்துவிழாமலே. (32)

ஐயன்மீரெம்மருமகவீரெனை
யுய்யநல்குமுயர்தவப்பாலிர்
நைபவீரடைநல்குதும்போதிரென்
றெய்துகானிடைப்பின்னருமெய்தவே. (33)

நிகிரியோன்றடைத்தோவனென்னெடுங்
ககனமீதுந்தொடர்ந்தகருணையா
னகாநீக்கினனுமின்னேடுவிட்
டகல்வனென்பபோலப்புறத்தாயினன். (34)

பானுமன்னவனீங்கலும்பாயிருட்
கூனவேலையுலகெங்குங்கொண்டநா
ளானமன்னவனீங்கவவன்புவி
போனவெப்பவிராக்கதர்போற்பினே. (35)

வனம்புகுபடல முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

விளம்பரம்.

---

8 அணா 4 அணா நிக்கல் நாணயங்கள் செல்லாது என்பதாக ஒருபெரிய வதந்தி மதுரையில் ஏற்பட்டிருக்கிறது. அதுபொய். இந்த 8 அணா 4 அணா நிக்கல் நாணயங்கள் எப்போதும்போல் செல்லும். அவைகளை உபயோகிக்கலாமென்று இதனால் அறிவிக்கப்படுகிறது.

K. V. S.

15—8—22. *For Collector.*

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரீ.

(யாப்பியல்)

(௩௩௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

11. த்ரிஷ்டுப் (11 அசை)

1. இந்த்ரவஜ்ரா=த த ஜ க க (5+6)
=ஞஞ ஞஞ நஞ ஞஞ

2. உபேந்த்ரவஜ்ரா=ஜ த ஜ க க (5+6)
=நஞந ஞஞந நஞந ஞஞ

3. உபஜாதி
இந்த்ரவஜ்ரா } இரண்டும் கலந்தது.
உபேந்த்ரவஜ்ரா }

4. தோதகம்
ப ப ப க க [6+5]
ஞநந ஞநந ஞநந ஞஞ

5. ப்ரமரவிலஸிதம்
ம ப ந ல க
ஞஞஞ ஞனன நநந நஞ

6. ரதோத்ததா {3+8 or 4+8}
ர ந ர ல க
ஞநஞ நநந ஞநஞந ஞ

7. வாதோர்மீ
ம ப த க க [4+7]
ஞஞஞ ஞநந ஞஞந ஞஞ

8. சாலினீ
ம த த க க [3+7]
ஞஞஞ ஞஞந ஞஞந ஞஞ

9. ஸ்வாகதா

ர ந ப க க [3+8]

ஞநஞ நநந ஞநந ஞஞ

12. ஜகதீ (12 அசை)

1. வம்ஶஸ்யம்
=வம்ஶஸ்தனிதம்
=வம்ஶஸ்வவிலம்

ஜ த ஜ ர [5+7]

நஞந ஞஞந நஞந ஞநஞ

2. இந்த்ரவம்ஶா

த் த ஜ ர

ஞஞந ஞஞந நஞந ஞநஞ

3. சந்த்ரவர்த்மா

ர ந ப ஸ [4+8]

ஞநஞ நநந ஞநந நநஞ

4. ஜலதரமாலா

ம ப ஸ ம [4+8]

ஞஞஞ ஞநந நநஞ ஞஞஞ

5. ஜலோத்ததகதி

ஜ ஸ ஜ ஸ

நஞந நநஞ நஞந நநஞ [6+6]

6. தாமரஸ

ந ஜ ஜ ய [5+7]

நநந நஞந நஞந நஞஞ

7. தோடக

ஸ ஸ ஸ ஸ [4+4+4]

நநஞ நநஞ நநஞ நநஞ

8. த்ருத்விளம்பிதம்

ந ப ப ர [4+4+4]

நநந ஞநந ஞநந ஞநஞ

9. ப்ரபா

நநரர [7+5]

நநந நநந ஞநஞ ஞநஞ

10. ப்ரமிதாக்ஷரா

ஸஜஸஸ [5+7]

நநஞ நஞந நநஞ நநஞ

11. புஜங்கப்ரயாதா

யயயய [6+6]

நஞஞ நஞஞ நஞஞ நஞஞ

12. மணிமாலா

தயதய [6+6]

ஞஞந நஞஞ ஞஞந நஞஞ

13. மாலதீ (யமுனா)

நஜஜர [5+7]

நநந நஞந நஞந ஞநஞ

14. வைஶ்வதேவீ

மமயய [5+7]

ஞஞஞ ஞஞஞ நஞஞ நஞஞ

15. ஸ்ரிக்விணீ

ரரரர

ஞநஞ ஞநஞ ஞநஞ ஞநஞ

13. அதிஜகதீ [13 அசை]

1. கலஹம்ஸம்

ஸஜஸஸக [7+6]

நநஞ நஞந நநஞ நநஞ ஞ

2. க்ஷமா

நநததக [6+7]

நநந நநந ஞஞந ஞஞந ஞ

3. ப்ரஹர்ஷிணீ

மநஜரக [3+10]

ஞஞஞ நநந நஞந ஞநஞ ஞ

4. மஞ்ஜுபாஷிணீ

ஸஜஸஜக [6+7]

நநஞ நஞந நநஞ நஞந ஞ

5. மத்தமயூரீ

மதயஸக [4+9]

ஞஞஞ ஞஞந நஞஞ நநஞ ஞ

6. ருசிரா (ப்ரபாவதீ)

ஜபஸஜக [4+9]

நஞந ஞநந நநஞ நஞந ஞ

14. ஶக்கரீ [14 அசை]

1. அபராஜிதா

நநரஸலக [7+7]

நநந நநந ஞநஞ நநஞ நஞ

2. அஸம்பாதா

மதநஸகக [5+9]

ஞஞஞ ஞஞந நநந நநஞ ஞஞ

3. மஞ்ஜரீ (பத்யா)

ஸஜஸயலக [5+9]

நநஞ நஞந நநஞ நஞஞ நஞ

4. ப்ரமதா (குரரீருதா)

நஜபஜலக [6+8]

நநந நஞந ஞநந நஞ

5. ப்ரஹரணகலிகா

நநபநலக [7+7]

நநந நநந ஞநந நநந நஞ

6. மத்யக்ஷமா (ஹம்ஸஶ்யேனீ=குடிலம்)

மபநயகக [4+10]

ஞஞ ஞநந நநந நஞஞ ஞஞ

7. வஸந்ததிலகா
=உத்தர்ஷிணீ
=ஸிம்மோந்நதா

தபஜஜகக [8+6]

ஞஞந ஞநந நஞந நஞந ஞஞ

8. வாஸந்தீ

மதநமகக [4+6+4]

ஞஞஞ ஞஞந நநந ஞஞஞ ஞஞ

15. அதிஶக்ரீ. [15 அசை]

1. தூணகம்

ரஜரஜர { 4+4+4+3 / 7+8 }

ஞநஞ நஞந ஞநஞ நஞந ஞநஞ

{ வீடலால வாயிலாய்
விழுமியார்க ணின்கழல் }

2. மாலினீ

நநமயய [8+7]

நநந நநந ஞஞஞ நஞஞ நஞஞ

3. லீலாகேலம்

மமமமம

யாவையும் நெடில்கள்

4. ஶஶிகலா

நநநநஸ

கடைசியைத்தவிர மற்றயாவும் குறில்கள

16. அஷ்டி. [16 அசை]

1. சித்ர

ர ஜ ர ஜ ர க [4+4+4+4]

ஒநஒ நஒந ஒநஒ நஒந ஒநஒந

2. பஞ்சசாமர

ஜ ர ஜ ர ஜ க [4+4+4+4]

நஒந ஒநஒ நஒந ஒநஒ நஒநஒ

ஒற்றைப்படை யசைகள் குறில்கள். மற்றவை நெடில்கள்.

3. வாணினீ

ந ஜ ப ஜ ர க

நநந நஒந ஒநந நஒந ஒஒந ஒ

17. அத்யஷ்டி [17 அசை]

1. சித்ரலேகா. (அதிசாயினீ)

ஸ ஸ ஜ ப ஜ க க [10+7]

நநஒ நநஒ நஒந ஒநந நஒந ஒஒ

2. நர்த்தடக

ந ஜ ப ஜ ஜ ல க [8+9]

நநந நஒந ஒநந நஒந நஒந நஒ

3. ப்ரித்வீ

ஜ ஸ ஜ ஸ ய ல க [8+9]

நஒந நநஒ நஒந நநஒ நஒஒ நஒ

4. மந்தாக்ராந்தா

ம ப ந த த க க [4+6+7]

ஒஒஒ ஒநந நநந ஒஒந ஒஒந ஒஒ

[கோடீ பர்துர் விரஹ விதுரா காசிதிந்திவராக்ஷீ]

கவிஶ்ரேஷ்டரான காளிதாஸர் இயற்றிய மேகதூதம் முழுதும் இவ்ருத்தத்தில் அமைந்துள்ளது.

க: சித் காந்தா விரஹ குருணா ஸ்வாதிகாராத்ப்ரமத்த:
ஶாபேநாஸ்தங்கமிதமஹிமா வர்ஷபோக்யேணபர்த்து: |

யக்ஷ: சக்ரே ஜனகதனயா ஸ்நானபுண்யோதகேஷு
ஸ் நிக்த: சாயாதருஷு வஸதிம் ராமகிர்யாச்ரமேஷு ||
[மேகதூதம் I. 1.]

5. வம்சபத்ரபதித்ா

ப ர ந ப ந ல க [10+7]

ஞநந ஞநஞ நநந ஞநந நநந நஞ

6. சிகரிணீ

ய ம ந ஸ ப ல க [6+11]

நஞஞ ஞஞஞ நநந நநஞ ஞநந நஞ

7. ஹரிணீ

ந ஸ ம ர ஸ ல க [6+4+7]

நநந நநஞ ஞஞஞ ஞநஞ நநஞ நஞ

18. த்ருதி. [18 அசை]

1. குஸுமிதலதாவேல்லிதா

ம த ந ய ய ய [5+6+7]

ஞஞஞ ஞஞந நநந நஞஞ நஞஞ நஞஞ

2. சித்ரலேகா

ம ப ந ய ய ய [4+7+7]

ஞஞஞ ஞநந நநந நஞஞ நஞஞ நஞஞ

3. நந்தன

ந ஜ ப ஜ ர ர [11+7]

நநந நஞந ஞநந நஞந ஞநஞ ஞநஞ

4. நாராச

ந ந ர ர ர ர [8+5+5]

நநந நநந ஞநஞ ஞநஞ ஞநஞ ஞநஞ

5. சார்த்தூலலலிதா

ம ஸ ஜ ஸ த ஸ [12+6]

ஞஞஞ நநஞ நஞந நநஞ ஞஞந நநஞ

19. அதித்ரிதி [19 அசை]

1. மேகவிஸ்பூர்ஜிதா

யமநஸரரக [6+6+7]

நஒஒ ஒஒஒ

நநந நநஒ

ஒநஒ ஒநஒ ஒ

2. சார்த்தூலவிக்ரீடிதம்

மஸஜஸததக [12+7]

ஒஒஒ நநஒ நஒந நநஒ

ஒஒந ஒஒந ஒ

3. ஸுமதுரா

மரபநமநக [7+6+6]

ஒஒஒ ஒநஒ ஒநந நநந

ஒஒஒ நநந ஒ

4. ஸுரஸா

மரபநயநக [7+7+5]

ஒஒஒ ஒநஒ ஒநந நநந நஒஒ நநந ஒ

	வர்க்கம்	வ்ருத்தம்	கணம்	யதி
20	க்ருதி [20 அசை]	1. கீதிகா (Gitika)	ஸஜஜபரஸலக	5- 7- 8
		2. ஸுவதநா	மரபநயபலக	7-7-6
21	ப்ரக்ருதி [21 அசை]	1. பஞ்சகாவளி	நஜபஜஜஜர	7-7-7
		2. ஸ்ரக்தரா	மரபநயயய	,,
22	ஆக்ருதி [22]	ஹம்ஸீ	மமத நநந ஸக	-8-14
23	விக்ருதி [23]	அத்ரிதநயா	நஜபஜபஜபலக	-11-12
24	ஸம்ஸ்க்ருதி [24]	தந்வீ	பதநஸபபநய	5-7-12
25	அதிக்ருதி [25]	க்ரௌஞ்சபதா	பமஸபநநநநக	5-5-8-7
26	உத்க்ருதி [26]	புஜங்கவிஜ்ரும்பித	மமதநநநரஸலக	8-11-7

R. S. நாராயணஸ்வாமி ஐயர் **B A.,B.L.,**

மதுரை.

முத்திநெறி.

சன்மார்க்கம்.

(உ௭உ—ஆம்பக்கத்தொடர்ச்சி.)

கஙூ. ஆணவமலத்தின் செய்தி எப்படியாம்?

விஷம், பாஷாணம், தீ, நீர், காற்று முதலான சடப்பொருள்களுக்குச் செய்தியுண்டாவதுபோல, ஆணவமலத்தினுக்குச் செய்தியுமுண்டாம்.

கச. ஆன்மாக்களுக்குத் தநுவாதிகளை அருளல் கடவுள் நினைவின் படியா? ஆன்மாக்கள் நினைவின்படியா?

ஆன்மாக்களின் நினைவின்படியேயாம். எங்ஙனம்?

குயவன் பாண்டங்களைவனையுமிடத்து, அவன் நினைவின்படிவனையாமற் பிறர்நினைவின்படியே வனைவான்; அதுபோன்ம். தன் நினைவின் படி வனையும்போழ்து, ஒருவடிவாகவே வனையாநிற்பன். பிறர்நினைவின் படிவனைவானுறற் பற்பல வடிவங்களாகவே வனையாநிற்பன். ஆதலால், குயவனைப்போலும் பரமபதி, மண்ணைப்போலும் மாயை, பாண்டத்தைப் போலும் தநு, பிறரைப்போலும் ஆன்மாவாம்.

கரு. ஆன்மாக்கள் சரீரத்தைப்பற்றிக்கொள்ளும்பான்மை எத்தன்மை?

படிகமலையானது, எந்தெந்தப்புறத்தில் எந்தெந்தவன்னத்தைத் தந்தபோதிலும், அந்தந்தப்புறத்தில் அந்தந்தவன்னத்தைப்பற்றிக் கொள்ளுமாபோல் எல்லாப்புவனங்களிலும், வியாபகமாயிராநின்ற ஆன்மாக்களுக்குக் கடவுளாவார், எந்தெந்தப்புவனத்தில் எந்தெந்தச்சரீரத்தை வழங்கினும், அந்தந்தப்புவனத்தில் அந்தந்தச்சரீரத்தை ஆசையுடன் பற்றிக்கொள்ளாநிற்பர். இதனுல், படிகமலை, படிகமலைக்கு ஒளி, படிகஒளிக்குப் பற்றுங்குணம், படிகஒளிக்குப் பற்றுந்தொழில், வன்னம், வன்னத்தைப்பற்றுவிக்கின்றவன் என்று ஆறுபொருள்கள் தலைப்படாநிற்கும். இங்ஙனம் தலைப்படுவனவற்றுள், படிகமலைபோலும்

ஆன்மா. படிகமலைக் கொளிபோலும் ஆன்மபோதம், படிகவொளிக்குப் பற்றுங்குணம்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுங்குணம், படிகவொளிக்குப் பற்றுந்தொழிலைப்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போலும் மாயாகருவி, வன்னத்தைப் பற்றுவிக்கின்றவனைப் போலும் கடவுளாம்.

கசு. ஆணவம் ஆன்மாக்களை மறைக்குந்திறம் எது போன்ம்?

சந்திரசூரியர்களை இராகுகேதுக்கள் மறைத்துக்கொள்வது போலும், தீயினை நீறுமறைப்பதுபோலும், ஆகாயத்தை மலை மறைப்பது போலும் ஆன்மாக்களை ஆணவ இருளானது மறைக்கா நிற்கும்.

கஎ. ஆன்மாக்களுக்குக் கன்மம் வந்து பொருந்துகை எப்படி?

ஆன்மாக்கள் நிரவயவர்களாயிருப்பதை மறந்து, அவயவர்களெனக் கருதிக்கொண்டமையான், அக்கன்மம் வந்து பொருந்தியதாம். அக்கன்மத்தால் மாயையு முண்டாயிற்று. மாயையினால், தனுவாதிகளு முண்டாயின.

கஅ. கடவுள் ஆன்மாக்கட்குக் கன்மங்களைப் புசிப்பிக்கு முறை எவ்வடிவால்?

இச்சா ஞானக் கிரியாசொரூபராயிருந்து புசிப்பிப்பார். இவற்றுள், ஆன்மாக்களை முத்தியிற் சேர்ப்பிக்கவேண்டுமென்பதே இச்சை. ஆன்மாக்கள் இச்சித்த கன்மங்களை அறிந்துகொள்ளச்செய்வதே ஞானம். ஆன்மாக்களுக்குக் கன்மங்களை ஊட்டி யுறக்கித் தொலைப்பித்தலே கிரியையாம்.

கசு. ஆன்மாக்களின் கன்மம் புசிப்பிக்குமாறு எத்திறத்தால்?

இச்சை, ஞானம், கிரியைவடிவாயிருந்தே புசிப்பது. இவற்றுள்; பண்டு பதார்த்தங்களிற் சென்று பற்றுவதே இச்சை. அவற்றைப் பகுத்தாராய்தலே ஞானம். எல்லாந் தனதென் றழுந்தியிருத்தலே கிரியை.

உ0. கன்மவகையும் இலக்கணமும் எத்தனை? என்னென்ன?

தூலகன்மம், சூக்குமகன்மம், அதிசூக்குமகன்மமென முத்திறமாம். இவற்றுள், இருவினைகட்கெல்லாம் தூலகன்மமென்றும் வினைகளுக்குப்

பின்பலனாக வருகின்ற புண்ணியபாவங்கட்கெல்லாம் சூக்குமகன்மமென்றும், புண்ணியபாவங்கட்குப்பின் பலனாக வருகின்ற இன்பதுன்பங்கட்கெல்லாம் அதிசூக்குமகன்மமென்றும் பெயராம். இவற்றை முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் எனவும் வழங்காநிற்பர். இம்முப்பாகுபாட்டினுள், பயிரிடுவதுபோல் ஆகாமியம், பயிரானுண்டாம் பலன்களைக் களஞ்சியத்திற் கொட்டிவைப்பதுபோலும் சஞ்சிதம் கொட்டிவைத்ததினின்று சிறுகச்சிறுகவெடுத் துண்பதுபோலும் பிராரப்தமுமாம்.

உக. கன்மங்கள் பலன்படும் நேர்மை எவ்வாறு?

ஒருவன், முன்பு பனையினைப்பதித்துப் பின்னர்க் கத்தரிச்செடியினை நட்டு, அதன்பின்னர்க் கீரையினைப் பயிரிட்டால், கீரை ஒரு பக்ஷத்துக்குட் புசிப்பாகவும், கத்தரி இரண்டுதிங்களுக்குட் புசிப்பாகவும், பனை பதினைந்துவருடத்துக்குப்பின் புசிப்பாகவும் வருமாபோல் ஆன்மாக்கள் முன்னர்த்தேடிய கன்மம் முன்னரேயே பலன்பட்டுவாராமல், வெகு பிறப்புக்களுக்குப்பின்னர்ப் பலன்பட்டு வருதலும், பின்னர்த்தேடிய கன்மமானது உடனே பலன்பட்டுவருதலு மாகும்.

உஉ. கன்மங்கள் ஆன்மாக்கட்குண்டாம் வழி எவ்வழி?

ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியாத்துமிகம் எனும் மூன்று வழியால் நேரும். இவற்றைத் தாபத்திரயம் என்றும் பகராநிற்பர். இவற்றுள், தெய்வத்தால்நேரும் இன்ப துன்பங்கட்குத் தெய்விக மென்றும், பூதங்களால் நேரும் இன்ப துன்பங்கட்குப் பௌதிகமென்றும், ஆன்மாக்களால்நேரும் இன்பதுன்பங்கட்கு ஆத்துமிகமென்றும் பெயர் கூறுவர்.

உ௩. கன்மங்கள் அகலுவது எவ்விதம்?

ஒருவன் பயிரிட்டு முதலாகக்கண்ட க000 (ஆயிரம்) கலம் நெல்லில், களஞ்சியத்தே ஐந்நூறுகலநெல்லைக் கட்டிவைத்து, முந்நூறுகலம் நெல்லைச் சாப்பாட்டுக்கென்றுவைத்து, இருநூறுகலம் நெல்லை விதைத்திருக்க; களஞ்சியத்திற் கட்டிவைத்தநெல் தீயா லழியவும், சாப்பாட்டுக்கென்று வைத்தநெல் சாப்பிட்டழியவும், விதைத்தநெல், மழையின்றிக் காய்ந்தழியவுமானாற்போல், ஆன்மாக்கட்குப் பக்குவம்வாய்ந்த

காலத்திற் சஞ்சிதமானது, ஞானசாரியருடைய திருநோக்கத்தாலும், பிராரப்தமானது புசித்தலினாலும், ஆகாமியமானது கடவுளாது நின்மல ஞானத்தாலும் அகலாநிற்கும்.

௨௪. சஞ்சிதமாதி பாகுபாட்டின் விளக்கம் என்ன?

சஞ்சிதமாவது, சனனங்கடோறும், அநாதியே தொடர்ந்து, ஆறத் துவாக்களிலுங் கட்டுப்பட்டு, அளவிறந்து கிடக்கும் இருவினைகளாம்.

பிராரப்தமாவது, சஞ்சிதத்தின் பரிபக்குவத்தைக்குறித்து, அதற் கேற்ற தனு கரண புவன போகங்களை உண்டாக்கிக்கொண்டு சஞ்சரிப்ப தாம்.

ஆகாமியமாவது, பிராரப்தத்துக்கிசைய எடுத்த தேகத்தில், அதன் பலத்தைப்புசிக்கையில் விருப்பு வெறுப்புக்களாலுண்டாகிய கன்மபலத் தைக்கூட்டுஞ் சிவனை இகழ்ந்த அபராதத்தால் நேரும் புண்ணிய பாவங்க ளாம்.

ஷை பிராரப்தமும் இச்சாப்பிராரப்தம், அநிச்சாப்பிராரப்தம், பரேச்சா ப்பிராரப்தம் என மூத்திறப்படாநிற்கும்.

இச்சாப்பிராரப்தமானது, மன்னன்மனைவியைத் தீண்டலினால் வந்துறும் சுக துக்கம்.

அநிச்சாப்பிராரப்தமானது, இடிபாதியால் உறும் பலன்கள்.

பரேச்சாப்பிராரப்தமானது, ஒருவர் ஒரு காரியம்புரிய, அதனால், அரசன், அவனை ஆக்கினைக்கும் அபராதத்துக்கும் உள்ளாக்க, அவற்று றாலும் இறும்பன்களாம்.

அன்றியும்; வேறு மூன்றுவித ப்பிராரப்தங்களுமுள. அவை: திருட்டப்பிராரப்தம், அதிருட்டப்பிராரப்தம், திருட்டாதிருட்டப்பிரா ரப்தம் என்பன.

திருட்டப்பிராரப்தமாவது தற்சமயம், ஔஷதபதார்த்தங்களா லும், மந்திரோச்சாடனங்களாலும், இம்மையிற் செய்த கன்மம் இம்மை யிலேயே உடன் பலிப்பதாம்.

அதிருட்டப்பிராரப்தமாவது இம்மையிற் புரிந்தகன்மம் மறுமையிலும் சுவர்க்க நரகங்களிலும் அநுபவிக்கை.

திருட்டாதிருட்டப்பிராரப்தமாவது இம்மையில் அசுவமேதயாகம் புரிந்தவன் இம்மையிலேயே சுக மநுபவித்துச் சுவர்க்க மடைவதாம்.

௨ரு. கன்மப்புசிப்பி லுண்டாம் முதன்மைப்பாடு எவரெவருக்கு?

ஆன்மாக்களுக்குப் பெத்ததிசையில், கன்மமாதியின் முழுவிருப்பம் இருக்கச்சே, கடவுளாவார் அவர்களைப் பார்த்துச் சுவர்க்கத்தினுக்கு வாருங்களென்று எவ்வளவு வருந்தி அழைத்தாலும், அவர்கள் வருவதற்கு மனம் உவக்காமல், அந்த மலமயத்திலேயே அழுந்திநிற்றலால், ஆன்மாக்கட்குப் பெத்தத்தில் முதன்மைப்பாடும், முத்திதசையில் அவ்வான்மாக்கள் கடவுளிடத்தில் அழுந்திக் கடவுள்மயமாகவேயிருக்கக் கடவுள் கருணைபாலிப்பதால் கடவுளருக்கு முத்தியில் முதன்மைப்பாடு முண்டாம்.

௨சூ. பதியாவார் பெத்தரிடத்தும் முத்தரிடத்தும் விளங்கும் பான்மை எதுபோல்?

பெத்தரிடத்திற் பாலுக்குள் நெய்போலும், முத்தரிடத்தில் தயிருள் வெண்ணெய்போலும் விளங்காநிற்பர்

௨எ. ஆன்மாக்கள் எப்போழ்துமே தனித்திராரேனல் எவ்வண்ணம்?

கண்ணானது, ஒருசமயம் ஒளியோடும், மற்றொரு சமயம் இருளோடும் கூடியிருப்பதல்லாமல், எப்போழ்தும் தனித்தேயிராததுபோல ஆன்மாக்கள், ஒருசமயம் மலத்திலேயும், மற்றொரு சமயம் கடவுளிடத்திலேயும் கூடியிருப்பதல்லாமல், எப்போழ்துமே தனித்திருக்கவே மாட்டா.

௨அ. ஆன்மாக்களிடத்தில் பதியும், ஆணவமுங்கூடியிருக்கும் கூட்டுறவு எத்தன்மைத்து?

ஒருமரத்தில், அடிதொடுத்து முடிபரியந்தம் இரதமும், அக்கினியும் பொருந்தியிருப்பதுபோல், கடவுளரும் ஆணவமும் ஆன்மாக்களிளிடம் எக்காலும் இடைவிடாது பொருந்தியேயிருப்பர்.

உகூ. ஆன்மாக்களுடன் கூடியிருக்கும் பதியினுக்குத் துன்பமாகிய அவத்தை வாதியாமை எதுபோல்?

ஆதித்தனது பிரகாசமானது படிகவொளியிற் கலந்துநின்று, வன்னங்களைப் பற்றுவித்தும், தான் பற்றற்றிருக்கும் நிலைபோலவும், ஒருவன் அநுபவிக்கிற துன்பமானது, அவன் வயிற்றிலுள்ள கிருமியாதிகட்கு எட்டுணையும் வாதியாததுபோலவும் கடவுளரைத் துன்பமாகிய அவத்தை ஒருக்காலும் வாதியாது.

௩௰. காரண காரியாவத்தையாதி அவத்தைக் கோத்து என்ன?

காரணாவத்தையானது கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை யென முத்திறப்பட்டாநிற்கும்.

காரியாவத்தையானது கீழாலவத்தை, மேலாலவத்தை, மத்யாலவத்தை, போகாவத்தை, பிரேகாவத்தை, நின்மலாவத்தை என்று ஆறு பிரகாரமாயிருக்கும்,

(க) கேவலாவத்தை: ஆன்ம சருவசங்காரமுதல், சிருட்டிவரை ஆணவத்தால் மறைப்புண்டு ஒன்றுந்தெரியாம னிற்கு மவசரம். அதாவது, ஆன்மாக்கட் கநாதியே இயற்கையாயமைந்த தன்மை. இதனைக் காரண கேவலசகலமென்பர்.

உ. சகலாவத்தை: சிருட்டி முதல் சங்காரம்வரை பிறந்திறந்துழலு மவசரம். அதாவது பரமேச்சுரனுர்கொடுக்க வான்மாக்களடைவன. இதனைக் காரணசகலமென்பர்.

(௩) சுத்தாவத்தை: கடவுளுடைய திருவடியில் இரண்டறக்கூடு மவசரம். அதாவது பஞ்சமலங்களும் ஆன்மாவைவிட் டகலுவது. இதனைக் காரணசுத்த மென்பர்.

ஆத்தூர், சேலம்ஜில்லா. ப. சி. சிவப்பிரகாசம்பிள்ளை, தமிழ்ப்பண்டிதர்.

அரக்கர்சேனையையடிக்கடிதுயிலெழுந்தடாமன்
முருக்குநீயெனமுராரிதன்றிகிரியையராவிக்
கருக்குவைத்திவணிறுத்தியகாட்சியேபோல
நெருக்குகொம்மைகொண்டும்பர்மேற்றெருடுநெடுமதில்கள். (5)

கற்றைநீலமாமணியிடுதளத்தின்மேற்கதிரோ
னொற்றையாழிபொன்னுரைத்துரைத்தோடியபதண
மற்றைவாணிபராணியாலுரைத்தபொன்மாற்றுப்
பெற்றகார்நிறத்துரைகல்லேயாமெனப்பிறங்கும். (6)

கொண்டல்கண்படுகுடுமிநீண்மதில்புடைவருவான்
கண்டநுண்டொழிற்கதிர்விடுபடிகசோபான
மண்டபந்தியையடக்கியவயிற்றின்மேன்மடிப்பு
மொண்டயங்கியவுதரபந்தனங்களுமொக்கும். (7)

வேறு.

முன்னெதிர்த்தகோசிகற்குமுனிவசிட்டனூன்றுகோ
றன்னைவைத்தடங்கவென்றுதவமுயன்றதென்னவே
பொன்னெயிற்றலைப்புறப்பொறிக்குலங்களேயலா
லொன்னலர்க்குநகருளோர்கள்படையெடுப்பதொருசொலோ. (8)

தஞ்சையுமுறந்தையுந்தடங்கடற்கலிங்கமும்
வஞ்சியுங்குடக்கொடேவடக்கும்வந்தெதிர்ப்பினும்
விஞ்சுகாலினாலுடைந்தபஞ்சுபோலும்வேள்கணை
யஞ்சினாலுடைந்தபேதைநெஞ்சுபோலுமாகுமே. (9)

சிறந்தநான்முகன்சிரஞ்செறிந்தபொற்கிரீடமோ
நிறந்திகழ்ந்தநெற்றிமீதில்வாசிகைக்குநேரதோ
பிறந்திதன்கண்வாழ்வுபேறுவேண்டுதேவர்போர்த்தெடா
தறைந்தநாலுகுன்றமோவகண்டகோபுரங்களே. (10)

தொட்டதீபமமரர்மாடநடுவில்வைத்தசுடரதாங்
கட்டுகேதனங்கண்மேருவிற்பொறித்தகயலதாம்
வட்டநாழிகைக்கொலிக்குமணியிராமவநுசர்கூஉ
மெட்டெழுத்தைநிகர்வதாமவ்வீரிரண்டுவாயினும், (11)

மாரிகாத்தளித்தகோவருந்தனப்பொருப்பினைக்
காரிகாத்தவெற்றியான்கடைந்தெடுத்தமைத்ததோ
நாரிகாத்தபாகரெட்டுறுப்பினின்றதன்மையோ
வேரிகாத்ததுளவினானிருந்தபொன்விமானமே. (12)

பிரமசாரர்கிரகர்வானப்பிரத்தரானதாத்தரும்
பரமபாகவதர்களும்பகர்ந்தவேதவிசையினொ
லருவிமாறும்விரிகடற்குளலையுமாறுமலையெலா
முருகியோடமேசுணமாவுமும்பர்விட்டிறங்குமே. (13)

வாழ்விதிச்சருக்கின்மொண்டிருக்கினொடுமுதவுவோர்
வேள்விசெய்ப்புகைக்கொழுந்துவீசுதோறும்வாசவன்
றாழ்வரைப்பொன்மேனியாயிரங்கணுந்ததும்புநீர்
வாழ்விழப்பதஞ்சினன்கலுழ்ந்தபோல்வடிக்குமே. (14)

மூன்றுசந்திமூன்றுகுண்டமூன்றுதண்டமூன்றுநா
லான்றவெள்ளையைந்துவெல்வதைந்துவேள்வியைந்துமாய்த்
தோன்றநின்றமறைவலோர்கள்சொல்லும்வாய்மையல்லவோ
வான்றயங்கிமாதமூன்றுமாரியும்பொழிந்ததே. (15)

பழியறுத்தமாறன்முன்பராபரப்பொருட்சொலிக்
கிழியறுத்தபட்டனார்கிளைத்தமெய்க்குலத்துளோர்
மொழிதமிழ்ப்படுத்தவேதமுழுதுதேர்வைகாநசர்
வழிவழித்தொடர்ச்சியாகவாழும்வீதிகுழுமே. (16)

ஆனைதேர்கலங்களாகவாடன்மாசுருவெனத்
தானையேதரங்கமாகவீதியானசாகர
மானனார்களூடிவீசுமணிவடத்தின்மணிகொழித்
தேனைவீதிநதிகளாகியிடைபுகப்பரந்ததே. (17)

திருவிழாமலிந்தவீதிதெரியும்வண்ணமேழ்நிலைப்
பொருவின்மாடபந்தியிற்புரிந்தசாளரங்களின்
மருவிழாதவோதிமாதர்மைந்தர்சந்தமார்பிலே
யுருவியோடவிருகண்வாளியொளியிருந்துவிடுவரால். (18)

வேறு.

பாடற்சதங்கைத்தளிரடிச்செம்பஞ்சியேய்ந்தகுஞ்சியினார்
கோடைப்புழுக்கமாற்றாய்க்குளிர்சாந்தணிந்துதெளிநிலவின்
மேடைப்புரிசைத்தலத்தமர்ந்தும்வெண்கேசரிந்துஞ்சாரிகையை
மாடப்புறவைக்கவர்ந்தொளித்தும்மகளிருடனணிவிப்பார். (19)

கொண்டநிலைக்குமணிமாடநிழலிற்குழுமிச்சிறுமியர்கள்
வண்டலிழைக்குஞ்சிற்றில்சிதைத்தழியீராணையெனமைந்த
ருண்டலெமக்குக்கொடுமெனச்சென்றுடனேபயில்வார்போன்றுமதில்
கண்டதூம்பின்மடைதிறந்தப்புனலாற்சிற்றில்கரைவிப்பார். (20)

திருகுபுரிக்கோட்டிடையறைந்தசில்லித்துளையிற்றிகழ்பச்சை
முருகுதூங்கக்கடைக்கணித்துக்குளகென்றயிர்த்துமூச்செறிந்து
பெருகுகடைவாய்நாநீட்டும்பெரும்போர்த்தகரின்வரும்பூச
லருகுநோக்கியாடும்விளையாடுமெனநின்றூர்ப்பரால். (21)

மத்தமதமாத்திதிக்கைதனின்மழையுட்பிறந்தமின்னலெனக்
கத்திகொடுத்துங்கதைகொடுத்தும்பாகரிணைத்துக்கரிபொருவார்
குத்துவதரிமுள்ளனையகூர்ங்காற்குறும்பூட்சமர்விளைத்துத்
தத்துகுருதிப்பெருக்கோடச்சரணுபுதப்போர்சிலர்விளைப்பார். (22)

மருட்டுங்கவளமுதலருத்திமதமேன்மதங்களேற்றுவித்து
முருட்டுவேழம்பின்றூரப்பமுடுகும்பரியைமுன்னடத்தி
வெருட்டுமொலியும்படைக்கலமும்வீழ்ந்தார்மீளாப்புனற்றடமும்
பொருட்டின்மதியாதடிப்பாயவேறிச்சிலவர்போய்மீள்வார். (23)

சல்லுமெழுவுமிருகரத்தாற்கறக்கிக்கந்துதழீஇக்கயம்போன்
மல்லுங்கதையும்பயின்றூர்த்துவலமுமிடமும்வட்டணித்து
வில்லுங்கடுகும்வடிவாளும்வேலும்வளையுந்தோமரமு
மல்லும்பகலும்பயின்மறவோர்விஞ்சைக்கூடமளப்பிலவால். (24)

ஏறுவிடுத்தும்வில்லிறுக்கென்றிசைத்துமிலக்கமெய்யுமெனக்
கூறுபடுத்தும்பொறியமைத்தவாவித்தலையிற்கோட்டியிட்டு
மாறுபடுத்திமறுபுலத்துவயவேந்தர்கடம்மைந்தர்களைத்
தேறியெடுத்துமகளிருக்குச்சிறப்பான்மன்றல்செய்குவிப்பார். (25)

பாடலளிசூழ்பசும்புன்னைபரவும்புளினத்திளமணலிற்
கூடலிழைத்தவிரற்சுவடுக்குளிர்கட்டுளியுங்காற்சுவடும்
வாடுமிடையாருகுத்திட்டவளையுங்கண்டுதளர்வெய்திச்
சாடுபெருந்துகூடணுகும்விசைபோற்புகுவார்தணந்தோரே. (26)

காவல்லவனுமிந்திரனுமளகைக்கிறையுங்காமுறுசீர்ப்
பூவல்லவமாயிரம்பகலும்பொன்னுமணியுங்கிடந்திமைக்குஞ்
சீவல்லவனர்பெருமரபிற்சிறந்தவேந்தர்திருவீதி
நாவல்லவம்யாங்கூறுதற்குமுடியுமென்றனகையுடைத்தே. (27)

கதிர்களிரண்டுந்துலைத்தட்டாய்மற்றேழ்கோளுங்கட்டளையாய்
விதிமுன்னிறுத்துக்கண்டதெனப்பொருள்கள்பலவுமிகத்தூக்கி
மதியின்மதித்துமுரைகண்டும்வரம்புதெரிந்துவிலைபகர்ந்து
மெதிருமிடக்கர்ப்பயில்வுரைத்துமிடமும்பொழுதுமறிந்தளப்பார். (28)

சுத்தமறவோர்சமர்க்களத்திற்றாணிப்பகழிதெரிந்தெடுத்து
வைத்தசிலையிற்றொடைமடக்கிமாறுதெய்யும்விரைவென்னப்
பத்தியிசைத்தபீடிகையிற்பந்தர்ப்பரப்பிற்சாக்கறையுள்
வைத்துநீட்டாவெடுத்தளிப்பப்பண்டமாற்றிவழங்குவார். (29)

பொன்னங்கலசந்தனைமுகட்டிற்கோடிக்கொன்றுப்புனைவித்து
மன்னுங்கனகமணிமாடம்வகுத்தவீதியிருமருங்கு
மின்னுங்கதிருமிளநிலவும்விளக்குமிருளும்போகமணிச்
சின்னங்கிடக்குமதைச்சிதகஞ்சித்துக்கொடுபோய்விளக்கிடுமால். (30)

பனிதவிளக்குநறும்புகையும்பசும்பொன்னுரைத்தவகிற்கூட்டுங்
களபம்வடிக்குந்தனிமணமுங்கமழுமுல்லைத்தார்மணமுந்
தெளியுநிலவிற்பலவண்ணஞ்சேர்த்தாலனையதுகில்வகையு
மொளியுஞ்சயனத்தைவகையுமுலவாவணிகரணிமாடம். (31)

தெய்வமறையோர்முதன்மூவர்செலுத்துமேவல்வழிநிலையு
மைவண்ணனையேதுதிபுரியும்வளனும்புராணக்கேள்விகளு
மெவ்வமகலுமமைச்சியலுமின்பப்பெருக்கும்பேரன்பும்
பெய்வதனையகொடைநலமும்பின்னோர்தெருவிற்பிறந்துளதால். (32)

வேறு.

கன்னலுமரம்பைக்காடுங்காட்டுபுகிடங்கில்வீட்டிப்
பின்னல்யானையினால்யானைபிடித்தல்போலிளைஞோர்தம்மைச்
சொன்னலக்கரும்பும்வாழைத்துடைகளுங்காட்டியல்கு
னன்னலத்தழுத்திக்கொங்கையானையாலிணக்குநல்லார். (33)

புதுமலர்கொய்துங்காதற்புருடரோடொலிநீர்தோய்ந்து
மதுவினைநுகர்ந்துஞ்சாந்துமாலைபூண்புனைந்தும்வீணை
முதலிசைபயின்றுமாடன்முயன்றுமெல்லமளிதன்னில்
விதுவொடுகோர்ந்தமென்னமேவுவார்சூதும்வெல்வார். (34)

கண்டவர்மனமுங்கண்ணும்பொருள்களுங்கவர்ந்துநீவிற்
கொண்டதோரும்பண்டம்போனயமெலாம்விலைபாக்கூறித்
தொண்டைவாயமுதமூட்டிச்சாததூல்பயிற்றுமாதர்
மிண்டியதெருவேபாரில்விஞ்சையர்சிரேணியாமால். (35)

இப்பிகுழிடம்புரிச்சங்கிதகுழம்வலம்புரிச்சங்
கப்படிச்சலஞ்சலங்களைக்குழைந்தடுக்கின்சங்க
மொப்பெனச்சாங்கரத்தோருலோமமோரிரண்டினுள்ளோர்
செப்புநாத்குலத்தோர்நித்தோர்முறைகுழத்திகழுங்கோயில். (36)

அலையெறிதடத்தின்பாங்காடியமகளிர்காஞ்சிக்
கலையிடைதூக்குங்காசுங்கால்விரலணியுமன்னோர்
நிலையுறுகணைக்காருனுநிழலிடைதெரியக்கண்டு
வலையினம்மினம்போய்ப்பட்டவேயெனமடங்குமீன்கள். (37)

ஒருமுறைகேட்டபாட்டுமெழுத்தொளித்தோதுபாட்டும்
பொருணிலைகரந்தபாட்டுங்கணக்குமைந்தங்கப்போக்கும்
வருபலவினவுங்கூறிமன்னராற்புகழும்வாணர்
தெரிவையர்கழங்கம்மானைபந்தடித்தொகையுந்தேர்வார். (38)

கடலிடையுதயன்போலக்கல்விமாணுக்கர்நாப்பண்
வடகலைதமிழ்மற்றுள்ளமாண்கலையுணர்த்துவாரு
மிடுதிறையளந்துளாருமிறைமகனேவல்கேட்கும்
படர்களுஞ்சூதாட்டோருமொலிப்பதப்பதியின்செல்வம். (39)

விண்ணின்மீனுதித்தாலன்னவெண்மணியலகுபெய்து
நண்ணியநாளுங்கோளுநான்முறைபகுத்துக்காட்டிக்
கண்ணியகாலமூன்றுங்கட்டுறீநட்டமுட்டி
யெண்ணியதுணர்த்துமெண்ணரிருக்கைகள்பலவுமுண்டால். (40)

ஆயிரநாம்பிற்பேசும்யாழைநாரதனேபார்க்க
வேயிருங்குழலைச்சங்கின்வேந்தைமாதவனும்பார்க்க
வாயிடெங்குடமுழாவைவாணனேபார்க்கவார்க்குந்
தூயபல்லியஞ்செய்மாக்கள்வாழ்க்கையார்சொல்லவல்லார். (41)

வேறு.

பூவாளத்தாற்பள்ளியுணர்த்தும்புலவோர்யாழ்
கூவாநிற்குங்கோழிமுதற்புட்குரலீட்டவ்
காவார்வண்டின்சிறொலிசங்கின்கடலோதை
யோவாதார்ப்பவைகறைசெல்லுமூரெல்லாம். (42)

உண்ணீர்வம்மென்றெறிமணியெற்றியுணவூட்டித்
தண்ணீர்பானந்தட்புபசாரந்தனிநல்கி
யெண்ணிருநல்லறமும்புரிந்தெண்ணிருதானம்
பண்ணீர்மையினனண்பகல்போமப்பதியோர்க்கே. (43)

தூசுஞ்சாத்திப்பூண்பலபூண்டுதோண்மார்பம்
பூசுஞ்சாந்தம்புலரவுலாவிமலர்சூடி
வீசுந்தென்றன்முன்றிலின்வீணைச்சுவைமாந்திக்
காசுண்கலையார்தூதொடுகழியுங்கடிமாலை. (44)

வேகங்கொள்ளும்வெய்யிலிலோடிமெலிகிற்பார்
தாகந்தீர்க்குந்தண்புனலோடைதிளைத்தென்ன
மோகங்கொண்டோர்நாரியர்கொம்மைமுலைபுல்கிச்
சோகந்தீரக்கங்குல்கடப்பார்துணையோடும். (45)

பொற்குன்றொக்கும்பூண்முலையாடிப்புணர்போகம்
விற்குஞ்சேரிவேசியரிதின்விடநீங்கிக்
கற்கும்பாணர்கல்லெறிவாங்குங்கடைநண்ணி
நிற்குங்கொண்கர்க்கெதிர்கொடுபணிவார்நெறிமாதர். (46)

கதிருந்தூமகேதுவுமுடுவுங்காரும்விண்
ணதியும்மெனலாய்நவமணிபீடத்திமம்வீசச்
சதிரின்றொங்கற்றாளவிதானக்கொடியாடு
மெதிர்கோள்வேந்தர்க்கிண்டையர்நல்குமிடமெல்லாம். (47)

கரணக்கோட்டிநிட்டியமாடக்கடையானுங்
கிரணக்காட்சிப்பாவையரெதிருங்கிளர்வானுந்
தரணிக்காட்சிபொய்யெனநீங்குந்தகையோரு
மிரணக்கோல்பாய்மானெனமருள்வாரிடைதோறும். (48)

கழலுங்கச்சுஞ்சரிகையுமிடையுங்கவிகைத்தண்
ணிழலுங்கொற்றச்சாமரைசிவிறிநிரைவீசுஞ்
சுழலுஞ்சுற்றச்செலுமிளையோர்பின்றொகையில்லாக்
குழலுண்கோதைமடவியர்தொடர்வார்கொடிவீதி. (49)

இந்திரன்வாழ்வுமுந்தருபேரனியல்வாழ்வுந்
தந்ததிவ்வூரிற்சார்பிணடிச்சேரியரில்லுங்
கந்திருவோருங்காமனும்வரினுங்கலின்மாதர்
சிந்தைசெயார்பொன்பெற்றவர்பித்தளைதேடார்போல். (50)

பச்சுவராழிசூழ்புவிதன்னிற்பதிகோடி
வச்சுவரங்கணல்கினுமிவைபோல்வாயாமே
விச்சுவகன்மன்வென்குவனுயிர்கள்விதிப்போனு
மச்சுவராதிவ்வூரினர்போலென்றயிர்ப்பானால். (51)

நகரப்படலமுற்றும்.

ஆகக்கவி-166.

கிருதகாண்டம்.

முதலாவது

வியாதரை இருடிகள் வினவுறுபடலம்.

நகரின்வண்மைகூறினமினிநைமிசக்கானப்
புகரின்முனிவோர்வேதவியாதப்புலவோனை
நிகரின்மதுரைமான்மியம்யாவுநீநன்ருய்ப்
பகரென்றேத்திக்கேட்பதைவேட்பின்படிசொல்வாம். (1)

வேறு.

சீர்தாங்குசெழுங்கமலச்செல்வியொடுமெட்டாங்கச்செம்பொன்மானத்
தேர்தாங்குமழகியமாலெழுந்தருளிவீற்றிருக்குமிம்பர்மீதிற்
பேர்தாங்கும்விண்டுபதமனையமதுராபுரியின்பெருமைபேசத்
தார்தாங்குகற்பகநாட்டமரருக்குமடங்காதுசாற்றுங்காலே. (2)

மூவுலகிலுள்ளனவாம்பெறற்கரியசிறப்புமவண்முனிவர்தேவர்
யாவருஞ்சென்றருங்கேள்விகேட்பதவண்கல்வியவண்யாகமகோடி
மேவுதவந்தானமவணயனரன்மால்விருப்புமவண்வெற்புவேலைத்
தீவின்வளம்படைத்தவணமிசாரணியமெனுந்தெய்வப்பூமி. (3)

முப்பொழுதுநீராடியிருபானுன்கெழுத்தெண்ணிமொண்டுவீசு
மப்பினராய்நெற்றியினீறப்பினராயெட்டெழுத்துள்ளடக்கினோரா
யெப்பொழுதுந்திருமாலுக்கடிமைசெய்வார்க்கிதம்புரியுமியல்பினோராய்த்
துப்புறவுமிடிசெல்வங்கனல்சிதஞ்சமமாகத்துய்க்குநீரார். (4)

இந்தியமுமதபேதத்திடணையுமிங்கிடையுமிராகமோக
பந்தனமும்வேரகழ்ந்துபறித்தெரியக்கோலெடுத்தோர்பசிவெங்கோபம்
விந்துவெனுங்கனலாற்றக்கமண்டலநீரேந்தினவர்விண்பொதஞ்
சிந்தைசெய்துகண்ணீருமுடற்புளகுமரும்பிமுத்திதேடவல்லார். (5)

இயமநியமாதிகளாலியமனைவென்றெண்குணத்தாலெண்குற்றந்தீர்ந்
துயவறுபஞ்சாக்கினியாற்பஞ்சபாதகக்காட்டையொருங்கேநீய்த்துச்
செயலறுமுப்பொறியதனுன்முக்குறும்பும்வென்றமுனிச்செல்வர்வாழ்க்கைக்
கயனருளான்மனுேவதிவிட்டாழியெனவிவ்வுலகிலடைந்ததாலே. (6)

வேறு.

நாமமும்மாநயிமிசமாவன
மாமெனும்படிகூறுவரவ்வனம்
பூமடந்தைமணாளன்புரத்திலோர்
சேமமன்னுதிருப்பதியென்பவே. (7)

பெண்பகத்தைவிலங்கும்புட்பேதமு
நண்பகத்தொடுநண்பகற்சேர்கில
சண்பகத்தும்வண்டேறுந்தரியலார்
மண்பகைத்தாண்மேற்கொள்ளுமள்ளர்போல். (8)

மோனமாதவர்முற்றுதவத்தினால்
வானநாயகன்றோன்றலுமண்மா
மேனையூசலுணின்றமெழுவரா
வானகல்லுளகவியெழுந்தபோல். (9)

கற்றைச்செஞ்சடைமாதவர்சாமனைப்
பற்றிச்சின்னம்பறித்துநிரைத்தபோற்
சிற்றுக்கோகிலங்கிள்ளைசுரும்புபூ
மற்றைத்தென்றல்வயந்தன்வயக்குமால். (10)

ஓமசாலையில்வந்திடுமும்பர்கோன்
றாமகோடிபுயலெனத்தோன்றலான்
மாமுனிவர்முன்வாகனமேறலான்
போய்மயங்கிப்புவியிடைமீளுவான். (11)

அனகர்சாலைக்கதிதியராய்வரும்
பனவமாணவர்க்கிந்திரன்பாற்பசு
வினியவுண்டிமுந்நூலுடையீவன
புனிதநான்மறைபூவைபயிறுமால். (12)

மந்திரக்கிளையாகவும்வண்கையிற்
சந்தமேறுந்தருப்பைவில்லாகவு
மிந்திராதியரேறுமிகல்வரேற்
சிந்தியெய்யுஞ்சிறார்விளையாடுவார், (13)

படிகக்குன்றின்முழைபுரைபண்ணவர்
சடிலச்செஞ்சடைதாருடைதோன்றுதல்
வடிவச்சந்திரன்மண்டிலங்கவ்விய
சடிலைப்பாம்பெனச்செக்கர்துளங்குமே, (14)

கனவிடாமன்முனிவர்கலன்சொரிந்
தனலையுங்காரஞ்செய்தமைத்தோம்புவார்
புனலையாங்கவர்தேவியர்பொற்குடந்
தனிலெடாமற்றிரட்டித்தருகுவார். (15)

இன்னமான்மியஞ்சேர்வனத்தீண்டியே
முன்னொர்காலஞ்சவுனகரேமுதற்
பன்னுமுத்திபதமடைவார்களாய்ச்
சொன்னமாதவர்தீக்கைதொடங்கினர். (16)

தீர்க்கசத்திரயாகமுஞ்செய்துழி
வார்க்கொள்சாரச்சோதக்கரைவாசராய்
நோற்குமாதவர்யாவருநான்முறை
மேற்கொள்வேதவியாதனைப்போற்றுவார். (17)

வேறு.

சனிதமரணங்கடந்தோனைத்தனக்குமோலோரிடமிலனைப்
புனிதநாராயணன்கலையாய்ப்புவனமுய்யப்பராசரன்பால்
வனிதையெனுஞ்சத்தியவதியின்வயிறுவாய்த்திவ்வடிவோடு
மினிதுபிறந்தகுணக்கடலையாவுமுணர்ந்தவாய்மையனை. (18)

எல்லாவுயிருந்தன்னுயிர்போலெண்ணியிரங்குங்கருணையனைத்
தொல்லாசிரியர்தவப்பேற்றைச்சுகமாமுனியையளித்தானை
நல்லாயிருடியாச்சிரமத்துயர்ந்தாய்நான்குமறையறமும்
வல்லாயுன்னாற்சொலக்கேட்டோஞ்சகலமோக்கவழிப்பயனும். (19)

இதிகாசங்கள்புராணங்களியம்புந்தீர்த்தகோடிகளும்
விதிசேர்போகம்வீடருளும்வியனுந்தலமும்விமலமதா
யதிபாதகங்கடீர்ப்பதுவாயறத்தின்வடிவாநதிவகையு
முதுகாவிரிக்குத்தென்பாலின்மொழியுமேழுயோசனையில், (20)

இடபாசலமென்றுலகேழுமேத்துந்தருமத்தடங்கிரிமேன்
மடவாள்பொன்னங்கமலமலர்வல்லியோடுமெஞ்ஞான்றுங்
கடல்போல்வண்ணனுறைவனவன்கமலச்சரணநூபுரத்திற்
றடமாநதியொன்றுதித்தெழுந்தநதியாவினுக்குந்தலைநதியாய், (21)

கருதுபயன்கைகூட்டுவதாய்க்கடியபாவமோட்டுவதா
யருவியதனிற்றோய்ந்தகாற்றடிக்குந்தேயமனைத்தினுக்கும்
வருசாத்திகமாய்விண்டுபத்திவழங்குமாயினந்நதிசேர்
திருநாட்டுறையுமவர்செல்வஞ்செப்பலாகுந்தரமன்றே, (22)

அந்தச்சிலம்பாற்றினுக்கேதெற்கருகாயொருயோசனையளவிற்
கந்தக்கடம்பவனமுளதக்கடம்பவனத்தினிடைப்பார்த்து
வந்தச்சுதன்றுட்பத்திதனைவளர்த்துத்தெரிசித்தவர்தமக்குஞ்
சிந்தித்திருமைப்பயன்கொடுக்குங்கிருதமாலைசெறிந்துளதால். (23)

அன்னாதிக்குத்தென்றிசையிலமராவதிக்குநிகராகி
மன்னுபோகம்புண்ணியங்கட்கிருக்கையாகிமதிமரபின்
முன்னமுதித்தபுரூரவனென்றுறையேபுரக்குங்கூடலெனப்
பன்னுநகரமிருக்குமதிற்பதுமைகேள்வனினிதுறைவான். (24)

எனவும்பண்டுபொழிப்பாகவிசைத்தாயுன்னால்யாங்களெலாம்
வினவுதலத்தாலத்தலத்தின்விசிட்டமுழுதும்விரித்துரைத்தற்
குனையேமிகவுங்காதல்கொண்டோமுணர்த்தலாம்போலிருந்தக்கான்
முனிவாவரிசேர்கருணையுளாய்மொழிவாய்மொழிதற்சருகனுநீ. (25)

என்னச்சவுனகாதியராமிருடிக்குழாங்கள்வினவுமுறை
தன்னைக்கேள்விப்புலப்படுத்தித்தலைவைபவத்திற்கருத்தாகிப்
பின்னைப்பிராட்டிமணவாளன்பிரசக்கமலத்திருவடியை
யுன்னித்தனதுமனஞ்சேர்த்தியுரைப்பான்வாதராயணனே. (26)

துறவீர்புவனமனைத்தினையுந்தாயவாக்குமும்மால்யான்
மறவீறகற்றான்கேள்விமாற்றங்கேட்டேனழகிதம்ம
நறவீர்ம்படலைத்துழாய்மோலிநங்கோன்மதுரைமான்மியத்தைப்
புறம்வீழ்சடிலநாரதற்குப்புத்தேளவையிலயனுரைத்தான். (27)

தெய்வமுனிக்குத்திசைமுகனுர்தெரித்ததனைத்தும்யான்வினவி
யுய்வதானேனுலகந்தோறுறையும்பதிகண்டேத்தினர்க்குக்
கைவந்தவுமெய்ப்பொருளுங்காதலவன்சீர்கேட்குநர்க்கோ
பொய்வல்வினைபோம்புண்ணியங்கள்பொருந்துமெனலாவிக்கதையை. ()

யானேசொல்லுந்தரமாவேன்யாண்டுகோடிபுகுந்தாலும்
வானோர்முனிவரயன்முதலோர்மனத்தினானுமளப்பரிதா
மானால்யானேதுறவீர்காளறிவானியன்றமாத்திரமாய்
நானேதயச்சான்றுண்மையினீர்கேட்குமாலத்தானவில்வேனால். (29)

காலைக்கமலத்திதழ்போலுங்கண்ணான்மார்பிற்றிருமறுவான்
சேல்க்கனிவைரினைத்தறுமென்சிர்வைதயோடிக்கரைந்தவான்
மேலைக்கலுழ்வைச்சமைப்படுத்திவிடயப்பரப்பைத்தடுத்தந்த
மாலைக்கருத்திலிருத்தியவனருளாலுமக்குவகுத்துரைக்கேன். (30)

கண்ணன்மதுரைவிசிட்டமதைக்கருதிப்புலன்களயல்போக்கா
தெண்ணியெழுதுமோவியம்போலிருந்துகேண்மின்யாழ்முனியா
மண்ணலெனக்கெவ்வாறுரைத்தானவ்வாறுமக்குநவில்வனெனத்
திண்ணமுனிவன்சவுனகரேமுதலோர்கேட்கத்தெரிக்கலுற்றான். (31)

முதலாவது வியாதனை யிருடிகள் வினவுறுபடல முற்றும்.

ஆகக்கவி—197.

இரண்டாவது

தவம்புரிபடலம்.

செங்கேழ்வெண்பற்பாசிழைசேருங்காரோதிக்
கொங்கேர்பொன்னந்தாமரையாள்நோனணிகூடற்
சங்கேபத்தின்காதையிதாகுந்தவமெய்தி
யங்கேயீசன்றோன்றியகதைமேலறைகிற்பாம். (1)

திடவிரதத்தீர்பெருநலனுற்றீர் திகழ்பார்த்தன்
கடவிரதப்பாகனதடிகட்கேகனிவேற்றி
நடவிரத்தீரிடிபடுநொய்ப்போனவைமாற்றி
விடவிரதத்துறயமெனமுற்றீவினைதீர்ப்பீர். (2)

நம்மானன்றாய்க்கேட்கப்பட்டேனோன்பாற்று
மும்மாலிந்நூல்கேட்பதனக்குண்டதிகார
மெம்மாலடியாரல்லாரிதுகேட்பவராகா
ரம்மாபின்னோர்லவதிகபதவியடையார்போல். (3)

மந்தணமிதனையாழ்முனியெற்குவகுத்திட்டா
னந்தமுனிக்குப்பிரமனுரைத்தானயனுக்கு
முந்தொருநாணவயோகியர்நடுவின்முருந்தன்றான்
புந்திதெரித்தானிவைபாரம்பரைபுகலுங்கால். (4)

இதுவினவியநாளிருமையின்வளமையுமெளிதெய்துந்
திதமுறுபரகதியடைவதுதிடநாத்திகன்மத்தன்
பதநெறியில்சடனசடுறுபதகன்பாசண்டன்
முதுமறைபிகழ்பவனிவரொடுகதையிதைமொழியாரே. (5)

பாபவியோகிகளாயெவருள்ளாரவர்பாலு
ஞாபகமாகவுணர்த்துவதன்றாலொருநாளுந்
தாபதரேயிக்காரணமதனாற்றழையன்பாற்
கோபமிலாதைம்புலன்வெலுநீரேகுறிக்கொண்மின். (6)

மன்னுமனோகரமானகதம்பவனஞ்சூழ
வின்னறைகாலதர்புன்னைசுரும்பரிருந்தூதப்
புன்னைமலர்த்தமணங்கமழ்தாதொடுபொன்வீசப்
பின்னியகூர்தற்கமுகிடைதோகைப்பெடையாட. (7)

குருகையின்மாறற்காமிதெனும்படிகுளிர்தென்றல்
வருவதுபோலதுவாடைமணந்தருமகிழோங்க
முருகலர்பிண்டியுமாவுமிதொன்றெனுமுறைதுன்ன
வருகுயர்சண்பகம்வேள்சிலைநாணுமெம்பின. (8)

மல்லிகைமுல்லைகண்மாலதிமேலதிமதுரஞ்சேர்
சொல்லியலார்தொடுகைம்மலர்மீதுந்துளிதூவப்
புல்லியவாடவர்புன்னகைசெய்வதுபோலெண்ணி
மெல்லியலார்நகமுகைவிரிகேதகைவெறியாட. (9)

செஞ்சவோங்கித்தேறல்கடேங்கிப்பயன்றூங்கி
விஞ்சுமேலோர்போல்விரிதெங்கம்பொழில்வீற
மஞ்சனாடமாலைகளாடமடவார்பொன்
னூஞ்சலாடுங்கமுகிடைகமுகினமூடாட. (10)

பூவிரிசோலைகளில்வளைகுழும்புனல்வையை
மேவுதடத்தட்டாங்கவிமானம்விதியாற்றாற்
றேவர்கடச்சன்செய்பமனங்கவர்திகழ்வெய்து
மாவயின்மலரானொடுநெடுமாலுமமர்வானே. (11)

தொண்டர்கள்பாலருள்கூர்பவனாருக்தொடர்பாலே
கண்டெனத்தமரப்பெயரோன்னைமலர்தூவிப்
பண்டிவன்வேண்டப்படிவமதாகிப்படிநின்றா
னண்டர்பிரானென்றியாவுமுரைத்தேனறியீரோ. (12)

வேறு.

பின்னுமென்கோலோகேட்பதற்காதரம்பிடித்தீ
ரென்னலோடுமெக்கேத்திரம்யாண்டதோவறியே
மன்னதெவ்வணமறிகுவோமதற்கமைவாகப்
பன்னுவாயெனப்பனவர்கேட்டலுமுனிபகர்வான். (13)

இடபமால்வரைதொட்டெழிற்குமரியாற்றளவும்
வடதுதெற்கெனுமெல்லையாய்மலயமால்வரையே
குடதிசைப்படக்குணகடல்காறுமாய்க்கூறும்
புடவிபாண்டியராண்டுளநாடெனப்புகல்வார். (14)

ஆயபாண்டிநாட்டமைதியெவ்வாறெனிற்சுவர்க்க
மேயதேவரும்விழைவதுபற்பலவிரிவாத்
தூயபுண்ணியப்பதியுடைத்தப்பதிதோறு
நேயமாதவர்மாதவற்பணிந்தனர்நெறியால். (15)

சயம்புவாம்பலதீர்த்தமுந்திகழ்ந்திடுந்தழைக்கு
மியம்புமத்தலமெவற்றினும்விசிட்டமாயென்றும்
வியன்படைத்ததுகதம்பமாவனமதின்மிகவும்
பயன்படைத்தறம்வளர்த்திடவிருப்பதோர்பதியே. (16)

நவிலுமன்னதினுலிரண்டுறுப்பொடுநண்ணிப்
புவியளந்தவற்குறையுளாய்ப்போற்றுமோர்விமான
மவிருமாங்கதன்கீட்டிசைதன்னிலாற்றருஞ்சீர்ச்
சுவணபுட்கரணிப்பெயர்த்தீர்த்தமுந்துவன்றும். (17)

யாவரும்புகழ்ந்தேத்துமத்தடத்தின்மேற்காகத்
தேவதேவனுமுலகெலாம்வெருக்கொளுந்திறத்தாய்
மாவளம்பெறுமருந்தவம்புரிந்தனன்வடவைத்
தாவமாகியதூமகேதுவுமவன்சடைமேல். (18)

உதித்தெழுந்ததுவெருவருங்காட்சியாலோங்கிக்
கொதித்துவானவர்தம்மைமூன்றுலகொடுங்கொழுந்தாற்
கதித்துநீற்றுவான்றலைப்படஇச்சிறலுங்கண்டார்
பதைத்துவானுளோரடங்கலும்பாகசாதனனும். (19)

நூற்றிதழ்க்கமலாலயன்பதத்தைநொய்தணுகிப்
போற்றினர்சரண்சரணெனப்புலவர்களெல்லா
மாற்றருஞ்சகச்சிருட்டிகாரணத்தனுயகிலம்
வீற்றுருவகைபுரந்தருள்விரிஞ்சநீகேட்டி. (20)

எதுவின்றியேவரும்பெரும்பயத்திடைநின்று
மாதிரின்னைவர்தடைந்தனமென்றலுமலரோ
னேதுமும்பர்காளுமக்கலாதிப்பயந்தான்
போதுமாறெவனென்றனன்விண்ணுளோர்புகல்வார். (21)

காமுமிழ்த்திடமுடித்தலைவணங்கிடக்கடவுட்
பிரமவோதமியோமென்றுமுணர்கிலோம்பெரிதும்
வெருவடைந்ததுதவிர்ப்பவருளையலால்வேறார்
வருதியாவையுந்தெரிந்துளாய்மற்றுநீயன்றோ. (22)

இடரினின்றெடுத்தெம்மனோர்ப்புரந்திடநீயே
கடவையாமெனவெருண்டகமருண்டுளோர்கழற
மடல்விரிந்தாண்மலர்மகன்வானவர்க்கருள்வான்
புடையில்வம்மினென்றவரொடும்பாற்கடற்புக்கான். (23)

வேறு.

பாய்திரைசுருட்டும்பாற்கடன்முகட்டிற்பஃறலைப்பாந்தண்மெல்லணைமே
லாய்துயில்புரிந்திவ்வுலகுயிரோம்புமன்பிலேசிந்தைசென்றடியார்
நோய்தனைக்களைந்துவிபுவெனத்தோன்றிநொடிதனிற்படைத்தளித்தழித்துத்
தோய்தருமாதிகாரணக்கடவுளையடிபணிந்தனர்துதித்தார். (24)

தேவர்கடேவேபழிச்சுவோர் துயரந்தீர்ப்பவசெகத்தினுக்கிறைவ
யாவர்கடமக்குமேலவவானோர்யாவருநின்சரணடைந்தேங்
காவலாயுன்னாற்புரந்திடற்குரியோம்பயமெனுங்கடலினின்றெடுத்தெம்
மாவிநீயருளல்வேண்டுமென்றுரைத்தாரரியுமவ்வாய்மைகேட்டுணர்ந்தான். ()

மன்றலங்கமலனிந்திரன்முதலாம்வானவர்தமைமுகநோக்கி
யின்றுமக்கியாதுபொருட்டினானடுக்கமெய்தியதியம்புமினென்னா
நன்றனைசேராதரத்தொடுநைந்தசையுநர்மனங்கவர்ந்தமிர்தாய்த்
துன்றுசெம்பிரமதரவாசகத்தாற்சொற்றலுந்திசைமுகனிசைப்பான். (26)

உனதுமாயையினான்மயங்கியோர்யாங்களுணர்ந்திலோமுலகினுக்கெல்லாந்
தனிமுதனீயேயுணர்குவையுனதாள்சார்ந்துளவெம்மையும்புரப்பா
யினியெனுமுரைகேட்டியாவுலகினுக்குநிதம்புரிந்தருளுருவெடுத்தோன்
பனிமொழியதனாற்பதுமனேமுதலபண்ணவர்க்கன்பினுற்பகர்வான். (27)

வந்துளதெய்வக்குழாங்களோதெரிந்தாமலைப்பயமுமக்கிலைபயத்தின்
பந்தமெம்மாலோர்காரணந்தரத்தாற்பரிகரித்திடுவதற்கமையு
மிந்தநான்வாமதேவமாதேவவியற்பெயர்படைத்தவோர்வள்ளல்
செந்தமிழ்ப்பாண்டித்தெய்வநாட்டிற்றிரையெறிவையையங்கரைமேல். ()

மலைகளின்றலைவன்மடமகடன்னைமணக்கொடுமொரானாய்வருத்த
விலைமெழுகென்னவுருகியமனத்தோடிலகெலாம்வெருவரும்யோக
நிலையினிற்றின்றனனிருங்கற்பினெறிவளர்மாதருமேலைப்
புலையினைத்தக்கன்புத்திரியாயபழியினாலவ்வுடல்போக்கி. (29)

என்றுநீத்தனனேவன்றுதானிமயத்திறைவனுக்கொருமகளாகிக்
கன்றுதீவிரமாந்தவரிலையினளாய்க்கண்ணுதற்கணவனைவேண்டிச்
சென்றுதென்பாண்டிநாட்டிலங்கயல்போற்சேர்ந்துநீள்கண்ணியாயிருந்தாண்
மன்றலங்கவட்குமுடியுமேனும்மைமறுக்கியவெருட்சியும்போமால். (30)

செயற்கையின்முறையாலியாம்புகுந்திவர்க்குத்திருமணம்புரிகுவித்தொல்லை
வயக்கொடூர்தாரகாசுரன்றன்னைவதைத்துலகளிக்குமாமுடித்தாம்
பயப்படாதெமதுசீக்கையாணையினுற்பண்டுபோனும்பதிக்கேகி
வியப்புடனிருத்திரென்றுபாற்கடலின்மேயினனருளிவீற்றிருந்தான். (31)

வேறு.

அம்முறைநன்றெனவயன்முதலோரு
மும்முறைதாழ்ந்துமுகிழ்த்தகையோராய்
மெய்ம்மயிர்நன்குபொடிப்பவிழிக்கோர்
பொம்மலடைந்துபுகுந்தனர்தம்மூர். (32)

இரண்டாவது தவம்புரிபடல முற்றும்.

ஆகக்கவி — 229.

மூன்றாவது

மணம்புரிபடலம்.

கன்றகணிச்சிகரத்திலமைத்தா
னின்றுமுனம்புரிசிட்டையுரைத்தா
மன்றவனுக்குமையம்மையையெம்மான்
மன்றல்செய்வித்தவளஞ்சிலசொல்வாம். (1)

இதுசிலவைகல்கழிந்தபினிப்பான்
மதியணிசெஞ்சடைவானவன்யோகின்
முதுவினைதன்னையுமுற்றுதல்பெற்றுக்
கதுமெனவோர்வழிகண்ணுதலானன். (2)

காளமுகிற்புரைகட்டழகும்பொன்
வாளவிர்பட்டுடைவாசமும்வாச
நாளமலர்த்திருநண்ணியமார்புந்
தோளுமுரத்திடைதோன்றியமறுவும். (3)

மின்னுகவுத்துவமணியும்வெயிற்பொன்
மன்னுகிரீடமுமலர்முகநிலவும்
பொன்னணியாரமுமலையுறழ்புயமேற்
றுன்னியவளையொடுதொடிகளுமிலக. (4)

மேருவெனத்திகழ்விநதைகுமாரன்
பாரமியற்றுபணைப்புயமேறித்
தேரினடத்துதிருத்தலையன்பின் .
வாரிதியொத்துவரும்படிகண்டான். (5)

கண்டுகளிப்பொடெழுந்துகலாவி
விண்டபுலன்கள்விழுங்கவியந்தே
தண்டலிலாதுசனார்த்தனனைக்கார்
வண்டிமிர்கொன்றையன்வாழ்த்தினன்மாதோ. (6)

மாயனரன்சொன்மறைத்துதிகேளா
நேயமிகுர்க்குமுனின்றிதுசொல்வான்
றூயவரீயிவ்வனத்தெவைசூழ்ந்து
பாயதவத்தொழில்பற்றினைபன்னாள். (7)

நின்னதுசென்னியினின்றுமெழுந்தே
வன்னியுகக்கடைவடவையெனப்போ
யிந்நிலமூன்றுமெரிப்பனகொடிதே
பன்னுதியென்னுபயன்றனைவல்லே. (8)

வந்தனனென்னுமனக்கிடையெல்லாந்
தந்தனனன்னெறிசார்விரதத்தோய்
மூர்த்தரையெற்கெனமுக்கணன்மிக்கா
யுர்த்தியபுள்ளரசூர்ந்தபிரானை. (9)

சங்கொடுநேமிதரித்தவனைப்பா
ரெங்குமளித்தருளீறிலிதன்னைப்
பங்கமில்பூரணனைப்பவமிலனை
யங்கெதிர்போற்றியறைந்திடுகின்றான், (10)

சாரன்மலைக்கிறைதந்தவள்கொண்கற்
சேரநெடும்பகலேற்பவன்சித்தி
நேரிழைகவுரியையரியருமொன்றான்
மாரன்வருத்தியமாகன்மனத்தால், (11)

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ம் ஹு ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1922 ஜூலை			வரவு 1921 ஜூலை		
I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	100	...	...			
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	1969	2	6			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள்விற்றவகையில் வரவு. ...	210	11	6			
(4) (a) பாங்கில் வட்டிக்குப் போடப்பட்டுள்ள மூலதனத் தொகை withdraw செய்தது						

விவரம்	செலவு 1922 ஜூலை			செலவு 1921 ஜூலை		
I General Section:						
(1) Establishment:—						
(a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	130	9	7			
(b) கலாசாலைஉபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	214	...	...			
(c) கலாசாலை மாணவர்கட்குப்போஷணைக்காகச்செல் ...	58	7	8			
(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ...	90	...	...			

வரவு ரூ. 50011-5-0						
(b) Miscellaneous வரவு ... 6—7—0						
ஆக ரூ. 50017-12-0	50017	12	...			
மொத்தம் ...	52297	1[illegible]	...	170	10	6
II EDITORIAL SECTION:						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	10	8	...			
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	22	4	...			
(3) விளம்பர சார்ஜ் வரவு...	4	...	...			
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	8	1	...			
மொத்தம் ...	44	13	...	61	6	...
III PRESS SECTION:						
(a) Printing Office:						
(1) சங்கம் அச்சாபீஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக்கூலி வரவு ...	472	4	...			

(2) Stationery, contingencies வகையிற்செல் ...	11	...	2			
(3) புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...	39	8	6			
(4) சங்கக்கட்டடத்தின் முன்பக்கம் காம்டவுண்டுகேட்டுக்குக் கதவுகள் செய்துபோட்ட வகையில் செலவு ...	29	10	3			
(5) தபால், தந்திவகையிற் செல்	19	9	...			
(6) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங் கூலிவகையிற் செலவு ...	46	12	...			
(7) (a) பாங்கில் withdraw செய்த மூலதனத்தொகையை மறுபடியும் deposit செய்தது ரூ. 50011-5-0						
(b) Miscellaneous செலவு ரூ. 6-0-0						
ஆக ரூ. 50017-5-0	50017	5	...			
மொத்தம் ...	50656	14	2	401	1	11

(2) ஜாப்வேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	59	11	6			
(3) Miscellaneous வரவு ..	...	8	...			
(b) Binding Office:						
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	135	9	...			
மொத்தம் ...	668	...	6	259	9	...

II Editorial Section:						
(1) சிப்பந்திகட்குச்சம்பளம்செல்	35	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	47	4	...			
(3) தபால், தந்திவகையிற்செலவு	11	12	...			
மொத்தம் ...	94	...	...	79	5	6
III Press Section:						
(a) Printing Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	160	13	8			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	42	9	9			
(b) Binding Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	30	5	4			

							(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	58	5	6			
							மொத்தம் ...	292	2	3	239	8	1
ஆகமொத்தம் வரவு ரு ...	53010	7	6	491	9	6	ஆக மொத்தம் செலவு ரு ...	51043	...	5	719	15	6
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரு ...	191	15	2	1081	5	2	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரு ...	* 2159	6	3	852	15	2
ஆகமொத்தம் ரு ...	53202	6	8	1572	14	8	ஆகமொத்தம் ரு ...	53202	6	8	1572	14	8

*By C Pass Book 1400—0—0
Cash on hand 759—6—3
2159—6—3

Audited and found correct,

V. S. RAMASWAMI,
AUDITOR,
24—8—22.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
18—8—1922.

-த.

,,


ருஷம் ஒன்றுக்கு

ெ

No. 2.

CHAMBERLAIN'S COUGH REMEDY.

இருமலுக்கு சேம்பர்லேன்துரை கண்டுபிடித்த மருந்து.



இது,

இருமல், சீதளம், சளிமாந்தம், நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல் முதலான தொண்டை, மார்பு வியாதிகளை எல்லாம் நீக்கும்.

இருமல்விஷயத்தில் அசட்டையாயிருக்கக்கூடாது. அது அபாயத்துக்கிடமான நோய். அது, கபவாதசுரம், இரத்தகாசம், க்ஷயரோகம் முதலியவைகளில் கொண்டுவிடும்.

சேம்பர்லேன்துரை கண்டுபிடித்த இருமல்மருந்து நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் சுகியுண்டாக்கும், இருமலையும் போக்கும். நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல் சுவாசம் தாராளமாய்ப் போகவரச்செய்யும். இரவில் இருமலின் உபத்திரவத்தைக் குறைக்கும், நித்திரையைக்கொடுக்கும்.

சேம்பர்லேன்துரை செய்த இருமல்மருந்தில் அபினிக்கலப்பில்லை.

☞ இது மூலிகைமயமான மருந்து.

☞ கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும்.

சின்ன புட்டி ரூ. 1. பெரிய புட்டி ரூ. 2.